PUBLIC LIBRARY
JAFFNA

பொதுசன நூலகம்
நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

மலர் : 134
இதழ் : 12
பக்கங்கள் : 08
திகதி : 11.07.2010
விலை : 15.00/=

இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு
Registered as a Catholic weekly (G.P.O.197) Founded 19 Feb.1876

பாதுகாவலன்
Paathukavalan

யாழ் மறைமாவட்டத்தின் உத்தியோகபூர்வ கத்தோலிக்க பத்திரிகை

# புனிதரின் முன்மாதிரியான வாழ்வை பின்பற்றுவோம்

## - ஆயர் தின விழாவில், மாணவர் மத்தியில் ஆயர்

யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களின் பெயர் கொண்ட திருநாள் 02-07-2010 அன்று பாடசாலை மாணவர்கள் உடன் இருக்க உணர்பூர்வமாக கொண்டாடப்பட்டது.

புனித பத்திரிசியார் மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையுடனும், திருக்குடும்பக் கன்னியர் பாடசாலை மாணவிகளினது நடனத்துடனும் ஆயர் அவர்கள் அவரது இல்லத்திலிருந்து மாலை அணிவிக்கப்பட்டு பேராலயத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு ஆயர் தலைமையில் கூட்டுத் திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

ஆயர் தனது மறையுரையில் புனித தோமாவின் அற்புதமான அப்போஸ்தலிக்க இறையாட்சி பணி பற்றி சிறப்பாக எடுத்துரைத்து. இந்தியாவில் அப்புனிதருக்குரிய வரலாற்று தடங்கள் பற்றியும் எடுத்துக் கூறி, அவரின் முன்மாதிரிகையான வாழ்வை மாணவர்கள் பின்பற்ற முயற்சிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

திருப்பலி நிறைவின் பின் மறைக்கல்வி பணி நிலைய இயக்குனர் அருட்பணி S. அன்ரன் ஜோர்ஜ் அடிகள் தலைமையில் ஆயர் தின பாராட்டு நிகழ்வு இடம் பெற்றது. யாழ். மறைமாவட்டத் தில் ஆயரின் சிறப்பான பணி பற்றி அருட்பணி ஜோர்ஜ் அடிகளாரும், துன்பம் நிறைந்த ஆயனுக்குரிய அழகான பணிகள் பற்றி குருமுதல்வர் அருட்பணி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடி களாரும் எடுத்துரைத்தனர்.

யாழ் மறைமாவட்ட மறை யறிவுத் தேர்வு மற்றும் விவிலிய வினா விடை போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு ஆயர் தினத்தன்று அவரின் திருக்கரத்தால் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது.



இந்நிகழ்வில் பங்குபற்றிய அனைவரின் உள்ளங்களிலும் ஒரு நிறைவு ஏற்பட்டது. இறுதியில் ஆயர் அவர்கள் இவ்விழா ஏற்பாட் டாருக்கும், விழாவில் பங்கு பற்றிய அனைத்து பாடசாலை அதிபர்கள்,ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

## புனித மடுத்தீனார் குருமட பெற்றோர் தின விழா

யாழ். மறைமாவட்ட புனித. மடுத்தீனார் குருமடத்தில் குருமட மாணவர்களின் பெற்றோர்களுக்கான ஒன்று கூடல் 2010-06-24,25 ஆகிய தினங்களில் நடைபெற்றன. 24ம் திகதி மாலை 4.30 மணிக்கு பெற்றோர்களை குருமட அதிபர், ஆன்மீகத் தந்தையை, மாணவர்கள் வரவேற்றனர். அன்று மாலை 7.00 மணிக்கு அருட்தந்தை. சகாயதாஸ் அடிகளாரின் வழிகாட்டலில் நற்கருணை ஆராதனையும், ஆசீர்வாதமும் இடம்பெற்றது. பின்னர் குருமடமாணவர்களினாலும் பெற்றோர்களினாலும் ஒரு சில மேடை நிகழ்ச்சிகள் செய்யப்பட்டன. குருமட அதிபர் அருட் தந்தை. சாள்ஸ்கொலின்ஸ் அடிகளார் குருமடத்தின் நிகழ்ச்சிகள் பற்றிய ஒரு நிரலுரையை நிகழ்த்தினார். பின்னர் குருமட மாணவர்களின் ஆற்றல்களைத் தாங்கி வரும் "தேனரும்பு VII" கையேட்டு சஞ்சிகையை நூலாசிரியர் நரேஸ் வெளியிட குருமட அதிபர் அதை பெற்றுக் கொண்டார். அதற்கான ஆய்வுரையினை அருட் தந்தை அருட்செல்வன் நிகழ்த்தி மாணவர்களை வாழ்த்தினார்.

நிறைவுநாள் காலை 7.00 மணிக்கு யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட் தந்தை ஜஸ்ரின் ஞானப் பிரகாசம் அடிகளார் பெற்றோர்கள், மாணவர்களுக்காக செபித்து திருப்பலி நிறைவேற்றினார். அருட்

(தொடர்ச்சி 8ம் பக்கம் பார்க்க...)

## வரலாற்று பாடநூலில் கத்தோலிக்க திருமறைக்கு முரண்பாடான கருத்துக்கள்

### - பேராயர் கல்வியமைச்சரைச் சந்தித்தார்

பாடசாலை வரலாற்றுப் பாடப்புத்தகங்களில் கத்தோலிக்க திருமறைக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் காணப்பட்ட கருத்துக்கள் பற்றி அதி வந்தனைக்குரிய பேராயர் மல்க்கம் றஞ்சித் அவர்கள், கல்வி அமைச்சுக்கு அறிவித்துள்ளார். பல பாடசாலைகளின் அதிபர்கள் ஆசிரியர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் 9ம்,10ம்,11ம் ஆண்டிற்குரிய வரலாற்றுப் பாடநூல்களின் சில பகுதிகளில் கத்தோலிக்க திருமறைக்கு களங்கம்

-(தொடர்ச்சி 8ம் பக்கம் பார்க்க..)

## திருவுள பணியாளர் சபையின் (IVD) புதிய முதல்வராக அருட்பணி. டண்ஸ்ரன் பொறுப்பேற்றார்

சகோதரத்துவத்தையும், சமாதானத்தையும் கிறிஸ்து இயேசுவில், கட்டியெழுப்புதல் என்ற பணி நோக்குடன் செயலாற்றும் திருவுளச் சபையின் புதிய முதல்வராக அருட்பணி. ஜேம்ஸ்டண்ஸ்ரன் அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இது இலங்கை திருச்சபைக்கும் யாழ் மண்ணுக்கும் பெருமை சேர்ப்பதாக அமைகிறது.

இறைவனின் திருவுளச் சபை கனடா தேசத்திலே கியுபெக் மானிலத்தில் 1958ல் ஆடித்திங்கள் 02ம் நாள் அமலமரி தியாகிகள் சபையை சேர்ந்த அருட்பணி தூயமரிய பாரன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. இன்று அது விருட்சமாகி ஏறத்தாள 20 நாடுகளில் வேரூன்றி கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றி வருகிறது. அவற்றுள் பல நாடுகள் பொதுவுடமைக் (Communion ) கோட்பாடுகளைக் கடைப்பிடிக்கும் நாடுகளும் இறைவனின் திருவுளச் சபையானது குருக்கள், மணத்துறவு ஏற்ற ஆண்டுகள், திருமண தம்பதிகளை உறுப்பினர்களாக கொண்டு பணியாற்றி வரும் ஓர் உலகுசார் துறவு சபையாகும்.

இந்நிலையில் இறைவனின் திருவுளச் சபையின் 50 ஆண்டுகால பயணத்தில் முதன்முதலாக கனடாவுக்கு வெளியே அதுவும் எமது மண்ணிலிருந்து அரு...



டண்ஸ்ரன் அவர்கள் முதல்வராக தெரிவு செய்யப்பட்டிருப்பது எம் அனைவருக்கும் மகிழ்ச்சி அளிக்கிறது. இலங்கை திருவுளச்சபை குடும்பம் பேருவகை அடைகிறது.

'ஆகட்டும்' என்ற மரியன்னையின் மனநிலையை தம்

(தொடர்ச்சி 8ம் பக்கம் பார்க்க...)

## நூல், இறுவட்டு (MP3) வடிவில் ....

## - உறவின் இராகங்கள்

அன்புள்ள அருட்தந்தையர்களளே! இறைமக்களே! "உறவின் இராகங்கள்" என்ற புதிய பாடற் புத்தகம் யாழ். மறை மாவட்டத் திருவழிபாட்டு நடுவகத்தால் வெளியிடப்பட்டு விற்பனையாகிக் கொண்டிருக்கின்றது. பழைய, புதிய வழி பாட்டுப் பாடல்களைத் தன்னகத்தே தாங்கி இப்புத்தகம் வெளிவந்துள்ளது. இப்புத்தகத்தில் உள்ள பாடல்களை இலகுவில் பயிலும் பொருட்டு அவற்றை இறுவட்டில் MP3 அமைப்பில் பாகம் I, II என்றும் வெளிக் கொணர்ந்துள்ளோம். பாகம் III தொடர்ந்து வெளிவரும் என்பதையும் அறியத் தருகின்றோம். பாடகர் குழாமினரும்

(தொடசர்சி 8ம் பக்கம் பார்க்க..)

## திருமதி றோசம்மா மரியராஜரட்ணம் காலமானார்



எமது மறைமாவட்டத்தில் பணியாற்றும் அருட்பணி. ம.கொ.ஞானேந்திரன் அடிகளின் அன்புத்தாயார் திருமதி றோசம்மா மரியரட்ணம் அவர்கள் 8.05.2010 கனடாவில் காலமானார். இவரின் ஆன்ம சாந்திக்கான இரங்கல் திருப்பலி எதிர்வரும் 17.07.2010 சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கும், அருட்தந்தை அவர்களுக்கும் காவலன் தனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து கொள்கிறது.

அன்னை மடியில் 13.04.1932

ஆண்டவன் மடியில் 08.05.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாவலன்

## இன்றைய உலகில் காவலனின் பணி....

உலகம் பல்வேறு துறைகளிலும் எத்துணை வேகமாக முன்னேறி வருகின்றது என்பதை நாம் அறிவோம். அந்த வேகத்திற்கு ஈடுகொடுக்க கூடிய வகையில் நாமும் எமது இலக்குகளை அடைவதற்கான பணிகளை திட்டமிட்டு ஒருமுகப்படுத்தி பொறுப்போடு நடக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இன்று உலகம் மிகவும் வேகமாக செல்லுகின்ற இத்தருணத்தில் நாமும் எமது சிந்தனைகளை இன்றைய உலகப்போக்கிற்கு ஏற்றவாறு தெரிந்துகொள்வதற்கு எம்மை நாம் இசைவாக்கிக்கொள்ள வேண்டும்.

இன்று பல்வேறு தொடர்புசாதனங்கள் நிமிடத்திற்கு நிமிடம் புதிய செய்திகளை வெளியிட்ட வண்ணமாய் இருக்கின்றன. இத்தோடு நாளேடுகள் வாரசஞ்சிகைகள், மாதஇதழ்கள், நாளாந்தம் வெளிவந்து கொண்டேயிருக்கின்றன. இவை வளர்ந்து வரும் சமுதாயத்தின் எதிர்கால வாழ்விற்கு வழிகாட்டுவதாக அமைய வேண்டும்.

இந்த வகையில் எமது பாதுகாவலன் இந்த நாட்டில் வெளியாகும் கத்தோலிக்க தமிழ் பத்திரிகை என்பதை யாவரும் அறிந்ததே. கிறிஸ்து சமயத்தை மக்கள் சரியான வழியில் வாழ்க்கை நெறியாகக் கொள்ள துணை செய்வது பாதுகாவலனின் அடிப்படை நோக்கங்களில் ஒன்று. இன்றைய உலக நடப்புக்களில் எது சரி, எது தவறு என்ற கேள்விகளுக்கு விடை காண முடியாமல் தவிக்கும் எமக்கு எல்லா நிகழ்ச்சிகளையும் கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் ஆய்ந்து முடிவெடுக்கும் ஓர் ஊடகமாக பாதுகாவலன் பயன்பட வேண்டும் என்பதே எமது விருப்பம்.

வாசிப்பதனால மனிதன் பூரணமடைகின்றான். இக்காலத்தில் வளர்ந்து வருகின்ற சமூகம் வாசிப்பதை முற்று முழுதாக நிறுத்தி விட்டது போல் கருதத்தோன்றுகின்றது. ஆகவே பெற்றோர், ஆசிரியர்கள், வழிகாட்டிகள் வாசிப்பதனுடைய முக்கியத்துவத்தையும் அதன் பலாபலன்களையும் வளர்ந்து வருகின்ற சமூகத்திற்கு எடுத்துச் சொல்ல வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

நூறு ஆண்டுகளிற்கு மேலாக அனுபவம் வாய்ந்த பாதுகாவலன் பத்திரிகையை எமது பாடசாலை மாணவர்களும், இளம் சமுதாயமும் கருசனை எடுத்து வாசிப்பதில் தவறி விடுகிறார்கள். சமயமும் அதன் படிப்பினைகளும் நமது வாழ்க்கைக்குரியன. பாடசாலையிற் படித்ததோடு பரீட்சைக்கு எழுதியதோடு சமயக் கோள்கைகளைக் கைவிட்டு, வெறும் உலக வாழ்க்கை வாழுவது தவறு. "சமயத்தையும் அதனோடு இணைந்த அனைத்தையும் கோவிலோடேயே வைத்துக்கொள்ளுங்கள்; எங்களை எங்கள் போக்கில் வாழ விடுங்கள்" என்ற சிந்தனை இன்று இளையோர் மத்தியில் இளையோடுவதை காணக் கூடியதாக இருக்கின்றது.

"இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள்" என்பது இயற்கையோடு இணைந்த வரலாற்று உண்மையாகும். இந்நாளைய தலைவர்களை இன்று உருவாக்க வேண்டிய பொறுப்பு எம் அனைவரின் கைகளிலும் உண்டு. நிறைவான சக்தியும், எதையாவது சாதிக்க வேண்டும் என்ற துடிப்பும், பொங்கியெழும் இளமைப்பருவம் வழிகாட்டுதலின்றி தனித்து விடப்படும் என்றால், எதிர்காலம் இதன் பாரதூரமான விளைவுகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும்.

இன்று எமது நாட்டில் நிலவும் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு இளைஞர்கள், யுவதிகளை உருவாக்கும் பணியை பெற்றோர் ஆசிரியர்கள், வழிகாட்டிகள், குருக்கள், துறவிகள் தமது முதன்மையான பணியாகும் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

வருங்காலத்தில் இந்த நோக்கம் நிறைவேற பாதுகாவலன் பத்திரிகையும் தனது ஆக்கங்கள் வழியாக சிறுவர்கள், இளைஞர்கள், யுவதிகள் என்போர்களிற்கான ஆழமான சிந்தனைகளை வெளிக்கொணர முயற்சிக்கின்றது. ஆகவே வாசக அன்பர்களாகிய உங்கள் ஆதரவும், ஆக்கங்களும் ஆலோசனைகளும், பங்களிப்புகளும் எமக்கும் மிகவும் இன்றி அமையாதவையாகும். இப்பணியை ஆற்றுவதற்கு பாதுகாவலன் ஒரு சிறந்த கருவியாக பயன்படவாய்ப்பளிக்கின்றது என்பதை உணர வேண்டும்.

"பாதுகாவலன் பணி இறைபணியாகும்"

– அருட்பணி கொலின் சாள்ஸ்

## ஜூலை மாதத்தில் கொண்டாடப்படும் புனிதர்கள்

| | | |
|---|---|---|
| 1. | முத்திப்பேறு பெற்ற ஜூனிவர் [– 1681] | (ஜூலை 01) |
| 2. | புனித அல்ரிக் [890 – 973] | (ஜூலை 02) |
| 3. | இந்தியாவின் அப். புனித தோமையார் | (ஜூலை 03) |
| 4. | புனித எலிசபெத் [போர்த்துக்கல்] [1271 – 1336] | (ஜூலை 04) |
| 5. | புனித அந்தோனி மரி சக்கரியா [1502 – 1539] | (ஜூலை 05) |
| 6. | புனித மரிய கொரெற்றி [1890 – 1902] | (ஜூலை 06) |
| 7. | புனித மரியமதலேன் [1726 – 1846] | (ஜூலை 07) |
| 8. | புனித உபால்ட் | (ஜூலை 08) |
| 9. | புனித வெரோணிக்கா ஜுலியானி | (ஜூலை 09) |
| 10. | ஏழு சகோதரர்கள், புனித ரூபீனா [2–ஆம் நூற்றாண்டு] | (ஜூலை 10) |
| 11. | புனித ஆசீர்வாதப்பர் [480 – 542] | (ஜூலை 11) |
| 12. | புனித அருளப்பர் குவால்பேர்ட் [985 – 1075] | (ஜூலை 12) |
| 13. | புனித ஹென்றி [972 – 1024] | (ஜூலை 13) |
| 14. | புனித கமில்லஸ் தெ லெல்லிஸ் [1550 – 1614] | (ஜூலை 14) |
| 15. | புனித பொனவெந்தூர் [1221 – 1274] | (ஜூலை 15) |
| 16. | புனித கார்மேல் அன்னை [1579 – 1640] | (ஜூலை 16) |
| 17. | புனித அலெக்சிஸ் [5–ஆம் நூற்றாண்டு] | (ஜூலை 17) |
| 18. | புனித பிரான்சிஸ் சொலானோ (1549 – 1610) | (ஜூலை 18) |
| 19. | புனித விக்டர் | (ஜூலை 19) |
| 20. | புனித ஜோன் (Of Valois) [1466 – 1505] | (ஜூலை 20) |
| 21. | புனித பிரண்டிசி லாரன்ஸ் [1559 – 1619] | (ஜூலை 21) |
| 22. | புனித மதலேன் மரியாள் [–84] | (ஜூலை 22) |
| 23. | புனித பிரிஜித் (சுவீடன்) [1303 – 1373] | (ஜூலை 23) |
| 24. | புனித லித்வினா [1380 – 1433] | (ஜூலை 24) |
| 25. | புனித யாகப்பர் [–63] | (ஜூலை 25) |
| 26. | புனித சுவக்கீன், புனித அன்னம்மாள் | (ஜூலை 26) |
| 27. | புனித பந்தலேயோன் [–305] | (ஜூலை 27) |
| 28. | புனித இன்னோசென்ட் [–417] | (ஜூலை 28) |
| 29. | புனித மார்த்தாள் [–84] | (ஜூலை 29) |
| 30. | புனித கிறிசோலொகு இராயப்பர் [406 – 450] | (ஜூலை 30) |
| 31. | புனித லொயோலா இஞ்ஞாசியார் [1491 – 1556] | (ஜூலை 31) |

## இலங்கை அப்போஸ்தலர் ஜோசப் வாஸ்

8ம் பகுதி (நவாலியூர் நாயகி)



வறுமையில் பழக்கப்பட்ட சிறுவன் ஜோன் துணையுடன்
எவ்வித தடையுமின்றி யாழ்நகரை அடைந்து
இலங்கையே என திலக்கு என்ற தன் விருப்பத்தை
இறைவன் துணையுடன் நிறைவேற்றிக் கொண்டார்

தெரிந்தவர்கள் யாரும் யாழ்நகரில் இல்லாததால்
தங்க இடம்தேடி நாள் முழுதும் அலைந்தார்
ஈற்றில் ஒரு பெண் தன் வீட்டுக் கெதிரில் உள்ள
மண்டபத்தில் தங்க அவரை அனுமதித்தாள்

காற்றும் குளிரும் பசியும் பட்டினியும்
இரத்தண்ட உணவுகளின் வேறுபாடும் ஒன்று சேர
வயிற்றோட்ட நோயினால் வருந்திய அவரை
தொற்றுநோய் என்று காட்டில் கொண்டுபோய் விட்டனர்

துணையாளன் ஜோனுக்கும் அந் நோய் வந்தமையால்
கொழுத்தும் வெய்யிலிலும் இரவில் குளிரினிலும்
படுத்தபடுக்கையாய் வெறுந்தரையில் கிடந்து
இறுதிவேளை நெருங்கிவிட்டதோ என இருவரும் மரண ஆயத்தம்
செய்தனர்.

விறகு பொறுக்கச் சென்ற ஏழைப்பெண்ணொருத்தி
பாதைதவறி வந்து அவர் பக்கம் சேர்ந்தாள்
அவர்கள் நிலைகண்டு மிகவும் மனம் நொந்து
தினமும் கஞ்சி தந்து அவர்களைக் காப்பாற்றினாள்

நலம் பெற்ற அவர்கள் யாழ்நகர் வந்து
கத்தோலிக்க மக்களைத் தேடி அலைந்தனர்
ஒல்லாந்தர் கொடுமையால் ஒழித்திருந்த மக்களிடம்
யாசகன் வேடத்தின் வாண் அடிகள் சென்றார். (தொடரும்)

- அறிந்துகொள்ளுவோம் -

திருச்சபையை வழிநடத்திய பாப்புமாரின் சுருக்கமான சரிதைகள்

### புனித தெலஸ்போறஸ் – Saint Thelesphorus (08)

இவர் கிரேக்கர் எனப் புனித ஜெரோனிமுஸ் கூறுகிறார். இவருடைய 11 வருட கால ஆட்சியைப் பற்றி எமக்கு அதிகம் தெரியாது. இவர் கி.பி. 136ம் ஆண்டு ஹாட்ரியன் ஆட்சியின் கீழ் வேதசாட்சி முடிபெற்றார்.

## தூயவர்களின் வரலாறு

ஜூலை 11– புனித ஆசீர்வாதப்பர் (480 – 542)

உலகில் பாவம் மிகுந்திருப்பதைக் கண்ட இவர், உலகத்தைத் துறந்து காட்டிற்குச் சென்றார். சுபியாகோ என்னும் மலையில் இருந்த ஒரு குகையில் தவம் செய்தும், செபித்தும் வாழ்வு நடத்தினார். அருகில் வசித்தஒரு தபோதனர் இவருக்கு ஆன்ம சாங்கோபாங்கத்தைப் பற்றி போதித்தார். ஆசீர்வாதப்பரைப் பற்றிக் கேள்விப்பட்டு பிறகர் அவருக்கு சீடராயினர். அவர்களுக்கென்று அவர் சந்நியாச மடங்களைக் கட்டி வைத்தார். அங்கு அவர்கள் சேர்ந்து வாழ்ந்து வந்தார்கள். அவர்களுக்கு அவர் சட்டங்களை இயற்றித் தந்தார். 520 - ஆம் ஆண்டில் அவர் மோந்தெகாசினோ என்னும் இடத்திற்கு சென்று ஒரு மடத்தை நிறுவினார். அவர் எழுதிய சட்டங்கள் புகழ் பெற்றன. அந்த மடம் உலகப் பிரசித்தி பெற்றதாயிற்று. அந்த சட்டங்கள் துறவிகள் உத்தமமாகும் வழியை தெளிவுறக் காட்டுகின்றன. துறவிகள் தங்களை அடக்கி ஆளவேண்டும், ஏதாவது ஒறுத்தல் செய்ய வேண்டும். தாழ்ச்சி, கீழ்ப்படிதல், செபம், மௌனம், மறைந்த வாழ்வு இவற்றை அவர்கள் நேசிக்க வேண்டும். உலகின் மீதும் அதன் கவலைகள் மீதும் அவர்கள் பற்று இன்றி வாழ வேண்டும்.

இவர் திவ்விய நன்மை உட்கொண்டார். பின் பீடத்தின் முன்னின்று கைகளை உயர்த்தி செபித்துக் கொண்டே உயிர்விட்டார். 24 பாப்புமார்களையும் ஆயிரத்திற்கு மேற்பட்ட புனிதர்களையும் இவரது சபை திருச்சபைக்குத் தந்திருக்கிறது.

## சிந்தனைத் தூறல்கள் – 09

### இறைவன் இறப்பானா?

அப்துல் ரகுமானின் சிறகுகளின் நேரம்

இறைவனை நம்புகிறவன், அவன் தன் துன்பத்தை நீக்குவான் என்று நம்புவான்.

அவன் அப்படி நம்பவில்லையென்றால், அவன் இறைவனை அறியாதவனாக இருக்கிறான் என்று பொருள்.

இறைவன் இருப்பதாக மட்டுமே நம்பி அவனை அறியாதவனாக இருந்தால், அவன் நம்பிக்கை மூடநம்பிக்கையாகும்.

இறைவனை நாம் அறிய முடியுமா என்றால், முழுமையாக அறிய முடியாது. ஆனால், இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்து அதை இயக்குகின்ற சக்தி எதுவோ, அதுவே இறைவன் என்றும், எது நடந்தாலும் அது அவன் நாட்டப்படியே நடக்கிறது என்றும் அறிந்திருந்தால் போதும்.

இதை அறிவது அவ்வளவு கடினமல்ல. பகுத்தறிவு பற்றி ஆழமாகச் சிந்தித்தாலே இதை நாம் அறிந்துகொள்ள முடியும்.

எது நடந்தாலும், அது இறைவன் நாட்டப்படியே நடக்கிறது என்பதை உணர்ந்தவன் துன்பம் நேர்ந்தால் துவளமாட்டான்.

ஆத்திகனுக்கு இருக்கும் ஆறுதல், நம் துன்பத்தை நீக்க ஒருவன் இருக்கிறான் என்ற நம்பிக்கையே.

அந்த நம்பிக்கையை அவன் இழந்து விட்டால், அவன் ஆத்திகனாக இருப்பதில் அர்த்தமே இல்லை.

நாம் அனுபவிக்கும் துன்பங்களுக்குப் பல காரணங்கள் இருக்கின்றன.

நாம் நினைத்தது நடக்காதபோது நாம் துன்பப்படுகிறோம்.

இந்த உலகம் நம்முடையதல்ல; இறைவனுடையது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரியாயின் சேனை - 2010

1921ம் ஆண்டிலே, அயர்லாந்து நாட்டின் டப்ளின் நகரிலே, செப் - 7ம் திகதி பிராங் டஃப் என்பவரால் தொடங்கப்பட்ட
**சேவைப் படை**

யாழ் மண்ணில் முதன்முதலாக பாண்டியன் தாழ்விலே ஆரம்பிக்கப்பட்ட
**வீரப் படை**

அமல உற்பவ மரியின் சக்தி வாய்ந்த இரக்கத்தின் மாதா எனப் பெயர் பெற்ற
**நல்லினப் படை**

அஞ்சாத நெஞ்சுரத்தால் சாத்தானையும் அவனது படைகளையும் தகர்த்தெறியும்
**போர்ப் படை**

கிறிஸ்துவின் வார்த்தைகளை சேவைச் செயல்களூடே ஆற்றி வரும் பண்டைக்கால
**உரோமைப் படை**

நேசத்தைப் பரப்பி ஆன்மாக்களுக்கு தொண்டுகள் ஆற்றிடும்
**பிரமாணிக்கப் படை**

உறுப்பினர்களைப் புனிதப்படுத்தி கடவுளை மகிமைப்படுத்தும்
**ஒரு நோக்கப் படை.**

மரியாவை உலகத்துக்கு எடுத்துக் காட்டும்
**ஓர் கண்ணாடிப் படை**

திருச்சபையின் உண்மையான முகத்தோற்றத்தை பிரதிபலிக்கும்
**ஒரு சமூகப்படை**

உடலும், உறுப்புக்களும் சேர்ந்து இணைப்பபட்டது போல செயலாற்றிடும்
**ஓர் தியாகப் படை**

சிறைச்சாலை, நோயாளர் தரிசனைகள், மரணவீடுகள் சந்திப்பு போன்ற பல அரிய செயல் புரியும்
**அற்புதப் படை**

தற்போது,ஆன்ம இயக்குநராம் ரெஜி ராஜேஸ்வரன் அடிகளாரின் வழிநடத்தலில் 75 ஆவது ஆண்டு பவளவிழாக் காணும்
**அருமருந்துப் படை**

"நான் முற்றும் உமக்கே சொந்தம் என்னுடையதெல்லாம் உமக்கே சொந்தம்" எனும் வார்த்தைகளால் எம்மை புதுப்பிக்கும்
**ஓர் புதுப்படை**

தாழ்ச்சி, பொறுமை, விடாமுயற்சி, விசுவாசம் என்னும் உதிரத்தை பருகி ஊதியங்கள் பெறாத
**ஓர் ஊழியப்படை**

யேசுவின் மறையுண்மைகளான பிறப்பு, இறப்பு, உயிர்ப்பு, போன்ற மகிமைதனை மணிகளாக உருட்டும்
**ஓர் செபமாலைப்படை**

பல பங்குகளில் பிரசீடியமாய் வித்திட்டு கொமிற்சிய, கியூறியாக் கூட்டங்கள் பெரும் விழுதுகளாய் வளர்ந்து பார் புகழ் பூத்த
**ஓர் சகோதரத்துவப்படை**

இதுவே எங்கள் மரியாயின் சேனையரின்
மறை பரப்புப் படை.

திருமதி - பானுகலா
விஜயகுமார்,
"அஞ்சனந்தாழ்வுப் பங்கு"
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# எண்ணத்தின் துளிகள்

எண்ணம் என்பது ஓர் தூறல் போன்றது. அது பல கோணங்களைக் கொண்டதாக அமைந்தது. எண்ணம் தோன்றும் போது கால சூழ்நிலை கூட மாறிப்போகும். பூ வந்து தானாகப் பூப்பதில்லை. அதற்கு மரம் வைத்து தண்ணீர் ஊற்றி வளர்ப்பது போன்றது தான் இந்த எண்ணம் பூவைப் போலத்தான். எண்ணத் துளிகள் கூட அதே போன்றுதான். ஒரு மனிதன் உள்ளத்தில் எழும் சிந்தனை கூட ஒரு கடலையே அடக்க முடியாத ஒரு அலையை போன்றது. இதுபோலவே தான் யேசுவின் நல்ல எண்ணமும் கூட தன்னையே தானாக இந்த மகன் பாவத்திற்காக இரத்தம் சிந்தி தனது உடலைத் தானமாக அர்ப்பணித்த எண்ணத்தின் சாரலை நம் எல்லோரின் பாவம் என்னும் எண்ணத்தால் செம்மறியைக் கொலைக் களத்திற்கு இழுத்துச் சென்றது போன்று நம் பாவம் என்னும் எண்ணத்தால் அவருக்கு மரண தண்டனை அளித்து விட்டோம். இப்படிப்பட்ட நாம் எல்லோரின் எண்ணத் துளிகளை வேரோடு பிடுங்கி எறிந்துவிட்டு வெற்றியின் வழிக்கு செல்வோம்.

தகவல்:
Block -01, M.No -

# தியாகத்தின் உருவே திருவிருந்து

கடவுளின் உள்ளான செயற்பாட்டை வெளி அடையாளத்தின் அடித்தளத்தில் புரிந்து கொள்வது அருட்கொடைகள் ஆகும். குறிப்பாக பாவசங்கீர்த்தனம், திருமுழுக்கு, உறுதிப்பூசுதல், திருநற்கருணை, திருமணம், எண்ணெய்ப் பூசி மன்றாடல், குரு அபிஷேகம் ஆகியவற்றை உதாரணங்களாக குறிப்பிடலாம். 1546ம் ஆண்டு ரிென்ட் நகரில் நடைபெற்ற மகா நாட்டின் போது ஏழு அருட்சாதனங்களின் முக்கியத்துவம் உணரப்பட்டது. ஆண்டவர் இயேசுவினால் ஏற்படுத்தப்பட்டதும் திருச்சபை வாழ்வில் முக்கியமானதாகவும் திருவிருந்து காணப்படுகின்றது. பழைய ஏற்பாட்டில் இஸ்ராயேல் மக்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றதை நினைந்து பாஸ்கா விழாவை கொண்டாடினர். இவ் விழாவின் மையத்திலேயே தூய நற்கருணை கட்டியெழுதப்பட்டது.

ஆண்டவர் இயேசு பூமியில் வாழும்போது பல்வேறுபட்ட நபர்களுடன் உணவருந்தியதை நற்செய்திகளில் காணலாம். அத்தகைய நிகழ்வுகளிலிருந்து வேறுபட்ட ஓர் உணவருந்தல் நிகழ்வாக திருவிருந்து காணப்படுகின்றது. சமநோக்கு நற்செய்திகளில் ஆண்டவர் இயேசு நற்கருணையை ஏற்படுத்திய முறையை குறித்து ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். யோவான் நற்செய்தியில் (அருளப்பர் நற்செய்தி) அப்பங்களை பலுகச்செய்த புதுமையுடன் திருவிருந்து தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. எனினும் புனித பவுலே (சின்னப்பரே) முதல் முதலாக கொரிந்தியருக்கு எழுதிய திருமுகத்தில் திருவிருந்தை பற்றி பேசுகின்றார். எனவே திருவிருந்து எமக்கு எத்தகைய பாடங்களை கற்பிக்கின்றது என்பதை குறித்து இங்கே ஆராய்வோம்.

ஆண்டவர் இயேசுவால் ஏற்படுத்தப்பட்ட திருவிருந்தின்போது ஆண்டவர் சீடர்களையும் உலக மக்களையும் நோக்கி என் நினைவாக இதை செய்யுங்கள் என கட்டளை கொடுக்கின்றார். இங்கு ஆண்டவரின் பாடுகள், மரணம், உயிர்த்தெழுதல் போன்றவை நினைவுகூரப்படுகின்றது. திருவிருந்தின்போது மற்றவர்களின் நன்மைக்காக ஆண்டவர் அனுபவித்த பாடுகளை நாம் நினைந்து கொள்ள அழைக்கப்படுகின்றவேளை நாமும் மற்றவர்களின் நன்மைக்காக எங்களை அர்ப்பணிக்கவும் தூண்டப்படுகின்றோம். மேலும் ஆண்டவரின் உடல் பிட்கப்படவும் அவரின் உதிரம் சிந்தப்படவும் அவர் தன்னை கையளித்தது போல சமூக விடுதலைக்காக நாமும் பிட்கப்படவும், சிந்தப்படவும் அழைக்கப்படுகின்றோம். ஒட்டுமொத்தமாக திருப்பலி எம்மை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுமாறு அழைக்கப்படுகின்றது.

புனித சின்னப்பர் கொரிந்து திருச்சபைக்கு எழுதிய கடிதத்தில் திருப்பலியில் கலந்து கொள்ளும் ஒவ்வொருவரும் சரீரம் இன்னதென்று சோதித்து நிதானிக்குமாறு அழைக்கின்றார். இங்கு சரீரம் என்பது கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபையை குறிக்கின்றது. எனவே நற்கருணையில் கலந்து கொள்பவரும் ஒருவர் கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபையில் உள்ள அங்கத்தவரின் நிலை எப்படி இருக்கின்றது என்பதை ஆராய்ந்து பார்க்க அழைக்கப்படுகின்றார்கள். அதாவது, திருவிருந்தை அருந்தும் ஒவ்வொருவரும் கடவுளே எனது நிலையிலும் பார்க்க பொருளாதார நிலையிலோ சமூக நிலையிலோ குறைந்து நிற்கும் ஒருவரை எனது நிலைக்கு உயர்த்த பாடுபடுவேன் என கடவுளோடு செய்யும் ஓர் பொருத்தனையின் இடமாகும். எனவே நற்கருணை என்பது, வெறுமனே ஒரு சடங்காக மாத்திரமன்றி எமக்கு பொருத்தமற்ற மட்டில் உள்ள உத்தரவாதத்தை உணர்த்தும் ஓர் இடமாகும்.

தூய நற்கருணையின்போது, கடவுளுக்கும் மனிதருக்குமிடையேயுள்ள ஐக்கியம் உணர்த்தப்படுவதோடு, மனிதருக்கும் மனிதருக்கும் இடையேயுள்ள ஐக்கியமும் வேண்டப்படுகின்றது. ஆண்டவர் இயேசு எல்லோரையும் இணைத்து இவ் ஐக்கியம் பந்தியை ஏற்படுத்துகின்றார். இதனூடாக பந்தியில் எத்தகைய பேதத்தையும் அவர் ஏற்படுத்தவில்லை. சிறப்பாக தம்மை காட்டிக்கொடுப்பவர் யார் என அறிந்தபோதிலும் அவரையும் இப்பந்தியில் இணைத்துக் கொள்வது எல்லோரையும் உள்வாங்கும் பண்பை எமக்கு காட்டி நிற்கின்றது. எனினும் கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபை வரலாற்றிலே திருவிருந்தினூடாக வெளிப்படும் ஐக்கியத்தை பிறருக்கு காண்பிக்க தவறியுள்ளதை நாம் காணலாம். மேலும், ஆண்டவர் இயேசு அப்பத்துண்டை தோய்த்து நான் யாருக்கு வழங்குகின்றேனோ அவரே என்னை காட்டிக் கொடுப்பார் எனக்கூறி யூதாசிடம் அப்பத்துண்டை கையளித்தார். இதன் மூலம் யூதாசின் தவறை இயேசு சுட்டிக்காட்டினார். இதைப்போன்று, திருப்பலி மேசையண்டை நாம் செல்லும்போது, எங்கள் தவறுகள் சுட்டிக்காட்டப்படுவதோடு நாம் தூய்மையாக வேண்டியதன் அவசியத்தை உணர அழைக்கப்படுகின்றோம்.

இறையரசில் இறைவனுடன் அருந்தவுள்ள எதிர்கால விருந்திற்கு ஓர் முன்னடையாளமாக இவ் ஐக்கிய பந்தி காணப்படுகின்றது. நற்கருணையின் வாயிலாக நாம் இயேசுவில் ஒரு பகுதியாகவும், இயேசு எம்மில் ஒரு பகுதியாகவும் மாறுகின்றார். 2000ம் ஆண்டுக்கு முன்னர் கல்வாரி மலையில் நடைபெற்ற தியாகத்தை திருப்பலி வாயிலாக நாம் நினைந்து கொள்ளும் போது எமது திருப்பலி கடந்த காலத்திற்கும், நிகழ்காலத்திற்கும் இடையேயுள்ள வரலாற்றுத் தொடர்பை ஏற்படுத்துகின்றது. இதனூடாக, வரலாற்றில் வாழ்ந்த இயேசுவின் பிரசன்னம் எமக்கு உணர்த்தப்படுகின்றது.

திருச்சபையின் வீர வரலாற்று காலப்பகுதியில் இடம்பெற்ற துன்பச் சூழ்நிலையின் மத்தியிலும் மக்கள் மறைமுகமாக, திரு நற்கருணையை அனுசரித்து வந்தனர். இதனால், ஏனைய மக்கள் கிறிஸ்தவர்கள் மீது சந்தேகம் கொண்டு அவர்கள் தங்கள் சொந்த குழந்தைகளை கொண்டு அவர்களின் உடலையும் இரத்தத்தையும் உண்டு வருகின்றனர் என்ற கொள்கையை பரப்பி வந்தனர். மேலும் 4ம் நூற்றாண்டில் திருச்சபை அரசமதமாக்கப்பட்ட பின்னர் திருவிருந்து ஒரு சடங்காக மாற்றப்பட்டு ஆயர் ஆளுகை முறைக்கு உட்படுத்தப்பட்டது. மேலும் 16ம் நூற்றாண்டில் சீர்திருத்தக்காலப் பகுதியில் திருநற்கருணை பல்வேறுபட்ட சபைப்பிரிவுகளினால் பல்வேறுபட்ட நிலையில் விளக்கப்பட்டது. ரோமன் கத்தோலிக்க திருச்சபை நற்கருணையை ஆண்டவரின் திருப்பலி எனவும், அங்கிலிகன் திருச்சபை பொருள் மாற்றத்தின் நிலை எனவும், மெதடிஸ்த திருச்சபை இதனையோர் அடையாள சின்னமாகவும், லூத்தரன் சபை கிறிஸ்துவின் ஆவிக்குரிய பிரசன்னத்தை உணரும் இடமாகவும் இச்சடங்கை புரிந்து கொண்டனர். 1936ம் ஆண்டு உருவாக்கப்பட்ட விசுவாசமும் ஒழுங்கும் என்ற அமைப்பிலும் திருவிருந்தின் முக்கியத்துவம் உணர்த்தப்பட்டுள்ளது. மேலும் 1981இல் வெளிவந்த 'லீமா' அறிக்கையும் திருவிருந்தின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது.

ஆண்டவர் இயேசுவால் ஒற்றுமையின் அடையாள சின்னமாகவும், எல்லோரையும் உள்வாங்கும் சாக்கிரமெந்தாகவும் உருவாக்கப்பட்ட அருட்கொடை வரலாற்றில் சரியான புரிந்துணர்வு இன்மையால் இன்று பிரிவினையின் அடையாள சின்னமாக மாறியிருப்பது மிகவும் கவலைதரும் ஒரு விடயமாகும். எனினும் எனது உடலை புசித்து, எனது உதிரத்தில் பானம் பண்ணுபவன் என்றும் முடிவில்லா வாழ்வை பெறுவார் என ஆண்டவர் இயேசு கூறிய கூற்று வாழ்விழந்துள்ள எமக்கு வாழ்வின் முக்கியத்துவத்தையும், நம்பிக்கையையும் எடுத்துக் காட்டுகின்றது. எனவே தியாகத்தில் மலர்ந்த ஆண்டவரின் அருட்கொடையை அருந்துவதினூடாக பிறர் மட்டில் எமக்குள்ள பொறுப்பையும் நாம் கடவுளுக்கு செய்ய வேண்டிய கடமையையும் செய்து முடிக்க திருவிருந்து எம்மை அழைக்கின்றது.

ஆக்கம் : கருட்பணி - கருணாம்பலம் ஸ்ரீபன்
இலங்கை இறையியல் கல்லூரி,
பிலிமத்தலாவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சித்துப் பார்க்கப்பட வேண்டிய உனது காலடித்தடங்கள்

அருட்பணி மா. றேஜிஸ் இராசநாயகம்

''வேட்டைக்காரனும் விறகு வெட்டியும்'' என்பது ஈசாப்பின் கதைகளில் ஒன்றாகும். ஒரு வேட்டைக்காரன் சிங்கத்தின் காலடித் தடங்களைத் தேடிக் கொண்டு சென்றான். காட்டில் மரம் வெட்டிக் கொண்டிருந்த ஒருவனைப் பார்த்து ''சிங்கத்தின் காலடித்தடங்கள் எதையாவது கண்டாயா? அல்லது சிங்கத்தின் குகை எங்கிருக்கிறது என்றாவது தெரியுமா?'' என்று கேட்டான். அதற்கு விறகு வெட்டி, ''ஆமாம், சிங்கத்திடமே உன்னைக் கூட்டிச் செல்கிறேன்'' என்றான். வேட்டைக்காரன் பயந்து நடுங்கி, ''இல்லை, இல்லை, நான் அதைக் கேட்கவில்லை, நான் காலடித்தடங்களைத் தான் தேடிக் கொண்டிருக்கிறேன், சிங்கத்தையல்ல'' என்று தட்டுத்தடுமாறிப் பதிலிறுத்தான். நாம் இறைவனோடும் பிறரோடும் கொள்ளும் தொடர்புகளில் பெரும்பாலும் இந்த வேட்டைக்காரனைப் போல் இருக்கிறோம். நாம் ஏதோ ஒன்றில் பற்றுறுதி உள்ளவர்களாகக் காட்டிக் கொள்கிறோம். ஆனால், அதை நேருக்கு நேர் சந்திக்கும்போது, நாம் அஞ்சி பின் வாங்குகிறோம்.

இதைத்தான் நாம் லூக்காஸ் நற்செய்தி 9:18-24 பகுதியில் காண்கிறோம். தன்னுடைய மற்றைய சீடர்களினதும் கருத்தை வெளிப்படுத்துகையில், பேதுரு வாளவர் நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட மெசியா இயேசுவே என்பதில் தமது விசுவாசத்தை அறிக்கையிடுகிறார். ஆனால், தாம் மெசியாவாக இருப்பதிலுள்ள சிக்கல்களை இயேசு அவருக்கும் மற்றைய சீடர்களுக்கும் வெளிப்படுத்தியபோது அவர்கள் பின்வாங்கத் தொடங்குகின்றனர். இயேசுவை மெசியா என்று ஏற்றுக் கொண்டதால் அச்சீடர்கள், இயேசு ஓர் இறைவாக்கினர் மட்டுமே என்று நினைத்த ஏனைய மக்களை விட உயர்ந்து விட்டனர். அடுத்து, இயேசு அவர்கள் கூறியதன் தாற்பரியத்தை அவர்களுக்கு விளக்கலானார். ''மானிட மகன் பலவாறு துன்பப்படவும் மூப்பர்கள், தலைமைக்குருக்கள், மறைநூல் அறிஞர் ஆகியோரால் உதறித் தள்ளப்பட்டுக் கொலை செய்யப்படவும், மூன்றாம் நாளில் உயிருடன் எழுப்பப் படவும் வேண்டும்.'' சீடர்கள் இதற்கு ஆயத்தமாக இருக்கவில்லை. அவர்கள் சிங்கத்தின் காலடித் தடங்களைத் தேடிக் கொண்டிருக்கின்றனர். இயேசு அவர்களைச் சிங்கத்திடமே அழைத்துச் செல்ல முன்வருகிறார். அவர்கள் பின்வாங்குகின்றனர். அதுமாத்திரமா? மத்தேயு நற்செய்தியில் இந்தப் பின்வாங்குதல் இன்னும் தத்ரூபமாக இருக்கின்றது. பேதுரு இயேசுவை தனியே அழைத்துச் சென்று அவருக்கு நேரவிருந்த பாடுகள், மரணத்திலிருந்து அவரை விடுவிக்க முயற்சிக்கிறார். இயேசு அவரைக் கண்டித்து, கடவுளின் நோக்கிலிருந்து பாராமல் மனிதநோக்கிலிருந்து பார்ப்பதால், அவரை ''சாத்தான்'' என அழைக்கிறார்.

ஒரு சம்பவம் கூறப்படுகிறது: ஒரு வாலிபன் அழகான ஒரு பெண்ணைக் காதலித்தான். அவளும் அவனை மனமார நேசித்தாள். அவனைப்பற்றி அவள் செய்த கற்பனைகள் அலாதியானவை. நாட்கள் நகர காதல் முதிர்ந்தது. கல்யாணமும் ஆயத்தமானது. அப்பெண் மிகவும் அழகானவள். ஆனாலும், அவள் இரண்டு கண்களும் பார்வையற்றவள். அவளது பெரியோர் அவளிடம் சென்று, உனக்குத் திருமணம் ஆகப்போகிறது. நீ காதலித்து கைப்பிடிக்கவிருக்கும் அவ்வாலிபனை பார்வை பெற்று பார்க்க விரும்புகிறாயா என்று கேட்டனர். அவளோ அனைவரும் ஆச்சரியப்படக்கூடிய விதமாக ''இல்லை'' என்று பதிலுரைத்தாள். ''ஏன்'' என்று கேட்டதற்கு ''நான் பார்வை பெற்று அவரைப் பார்க்கும் பொழுது நான் கற்பனை செய்ததுபோன்று அவரது தோற்றம் இல்லை என்றால் நான் இதுவரை வளர்த்த கற்பனை எல்லாம் தவிடுபொடியாகிவிடுமே'' என்று கூறினாள்.

நாமும் கடவுளைப்பற்றி பல விதமாக கற்பனை செய்து காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால், நமது ஊற்றாகிய இவ்வார்த்தைக்குள் ஆழமாக இறங்கி, நம்மை வழிநடத்தும் இறைவன் யார் எனத் தேடினால் அந்த இறைவன் யாரெனக் கண்டு கொள்வோம்.

யாழ் நகர எல்லைக்குள்ளே ஏறக்குறைய 29 கத்தோலிக்க ஆலயங்கள். நவநாட்கள் ஆலயப் பெருநாள் என்று பார்த்தால் ஏறக்குறைய 290 நாட்கள். ஒரு வருடத்தின் 12 மாதங்களில் ஏறக்குறைய 9 மாதங்கள் நவநாட்கள், ஆலயத் திருநாட்களிலே போகின்றன. ஒரு வருடத்தில் 290 நாட்கள் ஆலயத் திருவிழாக்களிலே போக எஞ்சிய 75 நாட்களில் கிறிஸ்து பிறப்புக் காலம், உயிர்ப்புக் காலம், ஏனைய திருநாட்கள். அதற்குள், பிறந்த நாள் கொண்டாட்டம் திருமண, குருத்துவ நினைவு கொட்டாட்டங்கள் என்று பல. ஆக, ஒரு வருடத்தில் பரிசுத்த வாரத்தைத் தவிர்த்து ஏனைய நாட்கள், காலங்கள் எல்லாம் கொண்டாட்டங்கள் தான். இவற்றின் ஒட்டுமொத்த விளைவு...?

யாழ் நகர எல்லைக்குள்ளே நடந்துகொண்டிருக்கும் களியாட்டங்கள், போதைவஸ்து, நீலப்பட பாவனைகள், வாய் கூசாது சொல்லமுடியாத கலாச்சார சீர்கேடுகள் ஒருபுறம். உற்பத்தியில்லாமல், வருமானம் இல்லாமல் செலவு செய்து அனுபவித்துக் கொண்டிருக்கின்ற குடா நாட்டு மக்களின் பொருளாதார நிலை, உற்பத்தியின்றி அனுபவிக்கும் ''சொர்க்கமான'' யாழ்ப்பாணம். இத்தகைய பொருளாதார அரக்கனின் பிடியிலிருந்து தப்பமுடியாது தற்கொலை செய்து கொண்டிருக்கின்ற அப்பாவிகளின் எண்ணிக்கை மறுபுறம். இவற்றின் மத்தியில் எம்மையும் எமது விசுவாச காப்பாளராகிய திருநிலையினரையும் எது எதற்கெல்லாம் இறைவன் அழைக்கின்றார் என்ற விழிப்புணர்வை எவ்வளவிற்கு இந்த தியானத்தின், செபத்தின் நாட்களாகிய நவநாட்கள், பெருநாட்கள் வழி சமைக்கின்றன என்ற வினாவை எமக்குள் ஒவ்வொருவரும் எழுப்பிப் பார்ப்போம்!

சுய ஆய்வுக்கும், சமூக ஆய்விற்கும் நம்மை இட்டுச் செல்லாத எந்த அரைகுறை ஆன்மீகமும், வழிபாடுகளும் அர்த்தமற்றவை மாத்திரமல்ல, ஆபத்தானவையும்கூட. நான் குருமட மாணவனாயிருந்தபோது வாசித்த Cedric Rebello என்பவர் எழுதிய "Is the Bible an aspirin or a dynamite?" என்னும் அரிய நூல் என் மனதைவிட்டு இன்னும் மறையவில்லை.

லூக்காஸ் நற்செய்தியின் பகுதி பேதுருவை சிறப்பாகக் குறிப்பிடாமல், சீடர்கள் அனைவரையும் ஒரு குழுவாகக் குறிப்பிடுகிறது. இயேசுவே மெசியா என பேதுரு அறிக்கையிட்டபின் நிகழ்ந்த இச்சம்பவத்தில் இயேசுவுக்கும் பேதுருவுக்குமிடையில் நடந்த இந்த உரையாடல் குறிப்பிடப்படாமைக்கு இதுவே காரணமாயிருக்கலாம். இயேசுவின் கைது, பாடுகள், மரணத்தின்போது சீடர்கள் விலகிப் போவதாக லூக்காஸ் காட்டுகின்றார். இயேசுவே மெசியா என்பதில் அவர்களுக்கிருந்த விசுவாசத்தின் தாற்பரியத்தை அவர்கள் உணரவில்லை என்பதையே இது காட்டுகின்றது.

பேதுருவும் சீடர்களும் சுயமாகச் சிந்திக்கும் துணிச்சலுக்காகப் பாராட்டப்பட வேண்டியவர்கள். இயேசு முதலில், ''நான் யார் என மக்கள் சொல்கிறார்கள்?'' என்றும், பின்னர், ''ஆனால், நீங்கள் நான் யார் என்று சொல்கிறீர்கள்?'' என்ற முக்கியமான கேள்வியையும் கேட்டது, தமது சீடர்கள் சுயமாகச் சிந்திக்க வேண்டுமென அவர் எதிர்பார்க்கின்றார் என்பதைக் காட்டுகிறது. எந்த விடயமாயினும் அது தொடர்பான சமகாலக் கருத்துக்களை சீடர்கள் அறிந்திருக்கவேண்டும். நூல்களைப் படிப்பதன் மூலமும், வானொலி கேட்பதன் மூலமும், தொலைக்காட்சி பார்ப்பதன் மூலமும், இன்ரனெற்றை அலசுவதன் மூலமும், தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். இவற்றுக்கு மேலாக, சீடர்கள் கிறிஸ்தவ விசுவாசம், திருவெளிப்பாடு ஆகியவற்றின் ஒளியில் முடிவெடுக்க வேண்டும். ''மக்களின் குரல்'' ஒரு வழவழப்பான சொல். அதைச் சரியாக இனங்காணாது விட்டால் அது எமக்கும் எல்லோருக்கும் ஆபத்தானதாய் அமைந்துவிடும். ''மக்களின் குரல் தமது மனச்சாட்சியின் குரலாக மாறுமளவுக்கு கிறிஸ்தவர்கள் ''மக்களின்'' குரலை அப்படியே உள்வாங்கக்கூடாது. உரோமர் 12:2 ல் புனித பவுல் இதைத்தான் எமக்கு கூறுகிறார். ''இந்த உலகத்தின் போக்கின்படி ஒழுகாதீர்கள். மாறாக, உங்கள் உள்ளம் புதுப்பிக்கப் பெற்று மாற்றம் அடைவதாக! அப்போது கடவுளின் திருவுளம் எது எனத் தேர்ந்து தெளிவீர்கள். எது நல்லது, எது உகந்தது, எது நிறைவானது என்பதும் உங்களுக்குத் தெளிவாகத் தெரியும்.'' நாம் விசுவாசமுள்ள மக்களாக, எம்மைச் சூழ உள்ளவர்கள் என்ன நினைக்கிறார்கள் என அறிந்திருக்க வேண்டும்; ஆனால், அவர்கள் நினைப்பதை அங்கீகரிக்கத் தேவையில்லை, என்று இயேசு அறிவுறுத்துகிறார். முற்காலத்தில் இருந்த இறைவாக்கினரைப் போல் எம்முள்ளே இறைவனது குரலாக இருக்கும் மனச்சாட்சியின்படி நாம் நடக்க வேண்டுமேயொழிய, அபிப்பிராயத்தின் படி அல்ல. இன்று கூட்டங்களை நாம் கண்டு எடுபடவேண்டியதில்லை அஞ்ச வேண்டிய தேவையில்லை. ஏரோதின் அரண்மனையில் பெருங்கூட்டம். ஏன்? குடிக்கவும் கும்மாளம்போடவும். திருமுழுக்கு யோவானின் சிறையிலே சிறு கூட்டம் சாட்சியம்பகரும் கூட்டம்...? எந்தக் கூட்டத்திலுள்ளவர் களுக்கு கொள்கை, மதிப்பீடு உண்டு......? ''உன்னுடைய நண்பர்களின் எண்ணிக் கையிலிருந்து உன்னுடைய வாழ்வை எடைபோடு'' என்ற ஆங்கிலக் கூற்றை அவதானமாகப் பயன்படுத்த வேண்டும். இறை விசுவாசம் வேண்டுவது இதுவே.

ஆயினும், இறைவன் நமக்கு என்ன சொல்கிறார் என்பதை அறிந்து கொள்வது கிறிஸ்தவர்களாகிய எமக்கிருக்கும் சவாலின் முதற் பகுதிதான். இன்னுமொரு திடமாகத் தீர்மானமெடுக்கும் இரண்டாம் பகுதி, இறைவன் நமக்குக் கூறுவதன் தாற்பரியத்தை நாது நடைமுறை வாழ்க்கையில் பின்பற்றுவதாகும். இதுவே கடுஞ்சோதனையான நேரம். இதுவே சிங்கத்தை எதிர்கொள்வதாகும். நீதியும் சமாதானமும் மேலோங்குவதற்குமுன் சிங்கத்தை எதிர்கொள்ள வேண்டும். இதில் ஏதும் குறைவுபட்டால் சிங்கத்தைத் தேடாமல் அதன் காலடித்தடங்களைத் தேடும் வேட்டைக்காரனைப் போல் இருப்போம். நாள் முடிவில் அவ்வேட்டைக்காரனுக்குக் கிடைக்கப்போவது ஒன்றுமில்லை. சீடர்களைப்போல் நாமும் ஒருநாள் கிறிஸ்துவில் நாது விசுவாசத்தைப் பறைசாற்ற அழைக்கப்படுவோம். எமது நாளாந்த வாழ்வில் விசுவாசத்திற்கு சவால்கள் நேரும்போது நாம் பின்வாங்கமாட்டோம் என இறைவனுக்கு வாக்களிப்போமாக. இதுவரை நடந்து வந்த எனது காலடித்தடங்கள் எப்படிப்பட்ட இயேசுவிடம் என்னை அழைத்துவந்துள்ளது? ''நானே வழியும், உண்மையும் உயிரும்'' (யோவான் 14: 6) என்று கூறும் இயேசுவிடமா ''இருபக்கமும் வெட்டக்கூடிய எந்த வாளிலும் கூர்மையான'' (எபி. 4: 12) வார்த்தையைக் கூறும் இயேசுவிடமா என்னை எங்கு இட்டுச் செல்லுகின்றார்? எந்த அளவுக்கு அவரைப் பின்பற்றுகின்றேன்?

நாளாந்தம் என்னை சுய ஆய்வுக்கும் சமூக ஆய்வுக்கும், இவ் ஆய்வுகளின் அடிப்படையிலான, விழிப்புணர்வு (சமகால நிகழ்வுகள் தொடர்பான) இதய சுத்தி நிறைந்த அர்ப்பணம்... இவற்றிற்கு என்னை இட்டுச் செல்லுகின்றேனா? உனது காலடித் தடங்கள் நாளாந்தம் பரீட்சித்துப் பார்க்கப்பட வேண்டியவையே.

# கிறிஸ்துவுக்காக அலைதல்

ஒவ்வொரு ஆன்மாவுடன் தொடர்புகொள்ள வேண்டுமென்ற இலட்சியம் கையருகிலிருக்கும் ஆன்மாக்களிடமிருந்து தொடங்க வேண்டும். அங்கேயே நின்றுவிடக் கூடாது. மாறாக சாதாரண வாழ்க்கை சூழலுக்கு அப்பால் வெகுதூரம் வரை இந்த இலட்சிய அடையாளப் பயணம் தொடரவேண்டும் (சேனை கைநூலிலிருந்து)

''உலகின் மீட்பர் இயேசு கிறிஸ்துவே'' என்று அறிவிக்கும் கிறிஸ்துவுக்காக அலைதல் பணியானது கடந்த மேமாதம் 27ம் 28ம் திகதிகளில் நிலாவெளி, புனித யோசேப்பு பங்கில் பரிகார மாதா கொமித்சியத்தின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்டது.

இப்பணியின் போது சாம்பல்தீவு, சல்லி, அன்னை வேளாங்கன்னி, அந்தோனியார், இலுப்பைக்குளம், சிலுவைமலை, பெரியகுளம், கோணேஸ்வரி, நிலாவெளி, கோபாலபுரம், குப்புருப்பிட்டி ஆகிய வட்டாரங்களுக்கு சென்று மக்களை தரிசித்து, அவர்களுடன் ''உலகின் மீட்பர் இயேசு கிறிஸ்துவே'' என்னும் நற்செய்தியானது பகிர்ந்து கொள்ளப்பட்டது.

இச்சந்திப்பின் போது வழித்துணையாக சாம்பல்தீவு, அமல மரியன்னை பிரசீடிய சகோதரிகளும் பங்கு மக்களில் ஒரு சிலரும் இணைந்து கொண்டனர். இரண்டாம் நாள் சந்திப்பின் போது திருகோணமலை, ஸ்ரெலா மரியகியூரியாவை சேர்ந்த அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

51 சேனையாளர்கள் பங்குபற்றி இப்பணியில் கிட்டத்தட்ட 265 வீடுகள் சந்திக்கப்பட்டன. இப்பணிக்கு பங்குத் தந்தை அருட்பணி பிரான்சிஸ் லொயிட் (அ.ம.தி) தனது முழு ஒத்துழைப்பை வழங்கினார். அத்துடன் துணைப் பங்குத்தந்தை அருட்பணி பிரிட்டோ அலோசியஸ் (அ.ம.தி) அவர்கள் ஆரம்பம் முதல் இறுதிவரை சேனையாளர்களுடன் கூட இருந்து அவர்களை வழி நடத்தினார்.

ஆண்டவரை மகிமைப்படுத்தும் நோக்கத்துக்காக சேனையாளர்கள் ஒன்று சேர்ந்து கிறிஸ்துவுக்காக மேற்கொண்ட அலைச்சல்களை அவர்கள் ஆசீர்வதித்து பலன்களை விளையச் செய்து கொண்டிருக்கிறார்.



நிலாவெளிப் பகுதியில் இல்லங்கள் சந்திக்க சென்ற குழுவின் ஒரு பகுதியினர்.

(தொடர்ச்சி 5ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஞாயிறு தியானத்துளிகள்

ஒவ்வொரு ஞாயிறு சிந்தனைத் துளிகளையும் வாசிக்கும் முன்னர் அன்றைய ஞாயிறு தினத்திற்குரிய திருவாசகங்களோடு ஒப்பிட்டுத் தியானித்து அவ்வாசகங்களில் உங்களின் மனதினைத் தொடும் வசனங்களை அன்றைய நாளின் நிகழ்வுகளோடு ஒப்பிட்டு சிந்தித்தால் இறைவார்த்தைகளில் பொதிந்து கிடக்கும் இறை அன்பை நன்றாகச் சுவைக்க முடியும்.

## நல்ல சமாரியர் – (பொதுக்காலம் 15ஆம் ஞாயிறு)

இசா 30:10 – 16 கொலோ 1:15 – 20 லூக் 10: 25 – 37

கடவுளன்பு கண்ணுக்கு தெரிவதில்லை. அஃது ஒவ்வொருவருடைய மனசாட்சியைப் பொருத்தது. ஒவ்வொரு மனிதனும் தன்னை படைத்த கடவுளை வழிபட வேண்டும் என்பது இயற்கையின் நியதி.

பிறரன்பு என்பது காணக்கூடியது. ஒவ்வொரு மனிதரும் அடுத்தவரில் காட்டுகின்ற செயல்பாடு இதனைப் பிரதிபலிக்கும். இந்தச் செயல்பாடு பலவகைப்பட்டது. அதாவது மனிதர் மனிதரை மன்னிக்கலாம்; பெற்றுக் கொள்ளலாம்; இரக்கப்படலாம்; உதவி செய்யலாம். ஆனால் இந்தச் செயல்பாடுகளை யாரிடம் காட்டுவது?

இந்த நல்ல சமாரியர் உவமை ஒரு கருத்தை வெளிப்படுத்தினாலும் பலபேர்களுடைய எண்ணங்களை மாற்றி வைப்பதாய் உள்ளது. என் அயலான் யார்? என்று கேட்ட சட்ட அறிஞருக்கு இயேசு கூறிய உவமை இது. குற்றுயிராக கிடந்தவருக்கு வாழ்வு யார் மூலமாவது தேவைப்பட்டது. பலர் அவரைத் தாண்டிப் போனார்கள். அதிலும் குறிப்பாக குரு ஒருவர் அவரைக் கடந்து செல்லுகிறார். லேவியர் ஒருவரும் அவரைக் கடந்து செல்கிறார். இருவருமே அவருடைய தேவையை அறிந்து கொள்ளக்கூட முற்படவில்லை. வெறுமனே கடந்து போனார்கள். ஆனால் அவ்வழியே வந்த சமாரியர் இவரும் என்னைப் போல ஒரு மனிதர் என்று மனதில் நினைத்தார். மனமிரங்கினார். அவரது தேவை தமது தேவையாகவே எண்ணிச் செயல்பட்டார்.

இயேசு தேவையில் இருப்பவனை அறிந்து செயல்படுகின்ற ஒவ்வொருவரும் நல்ல சமாரியர் என்று எடுத்து கூறினார். இந்த நல்ல சமாரியருடைய உவமை எனது இனம், எனது மொழி எனது தொகுதி எனது வேலை என் மக்கள் என்று 'குறுகிய வட்டத்தில் இருக்கின்ற ஒவ்வொருவருக்கும் ஒரு பரந்து விரிந்த நோக்கத்திற்காகப் பணி புரியவும் அன்பு காட்டவும் எடுத்துக் கூறப்பட்ட உவமையாகும்.

## மார்த்தா மரியா – (பொதுக்காலம் 16ஆம் ஞாயிறு)

தொநூ 18: 1 – 10 கொலோ 1: 24 – 28 லூக் 10: 38 – 42

நாசரேத்தூரிலிருந்து எருசலேமுக்கும், எருசலேமிலிருந்து நாசரேத்துக்கு போகும் வழியில் பெத்தானியா உள்ளது. இந்த ஊர் வழிப் பயணத் தங்குமிடமாக இருந்ததால் இயேசு அவ்வூரிலிருந்த மார்த்தா மரியா வீட்டிற்குச் சென்றார். எருசலேமுக்கு அருகில் ஏறக்குறைய 3 கி.மீ தொலைவில் ஒலிவமலையின் கிழக்குச் சரிவில் அமைந்துள்ளது பெத்தானியா. பெத்தானியா என்பது கிரேக்க வார்த்தை அனனியாவின் வீடு என்பது அதன் பொருள்.

உலகமெங்கும் ஒப்பில்லா உபசரிப்பிற்கு எடுத்துக்காட்டாக இருப்பது மார்த்தா இயேசுவிற்கு பணிவிடை செய்த நிகழ்ச்சியாகும். இயேசுவைத் தன் வீட்டிற்கு வரவேற்றதே மார்த்தா தான். பரபரப்பாக இயேசுவுக்கு அவள் செய்த பணிவிடைகள் பல. வீட்டிற்கு வந்தவரை உபசரித்து வந்தவருக்குப் பெருமையும் அளிக்கிறது. மார்த்தாவினுடைய பணிவிடைகள் இயேசுவுக்கு பிடிக்கவில்லை. பணிவிடையோடு வந்தவரிடம் கலந்துரையோடு ஒரு உபசரிப்பு என்பதை தெளிவுபடுத்தினார்.

கிறிஸ்துவ வாழ்க்கையில் ஒவ்வொரு கிறிஸ்தவரிடமும் இருக்க வேண்டிய முக்கியமான பண்பு மரியாவிடம் இருந்த தியானத்தின் பண்பாகும். நீ பலவற்றைப் பற்றிக் கவலைப்பட்டு கலங்குகிறாய். தேவையான ஒன்று. அது மரியாவிடம் இருக்கிறது என்றார் இயேசு. மரியாவுடைய பண்பு அன்று சாதாரணமாக இயேசுவோடு உரையாடிக்கொண்டிருந்தாள் என்று எடுத்துக்கொள்ளலாம். ஆனால் இயேசு என்ன சொன்னார்? அவள் எப்படி அதைக் கவனித்தாள்? என்பதைவிட இறைவனுக்குச் செவி சாய்த்தல் மரியாவினுடைய சிறந்த பண்பாக வெளிப்படுகிறது.

## குட்டிக் கதை – சிந்தித்துப் பாருங்கள்....

### நான் என்ன குற்றம் செய்தேன்?

வேதகலாபனைக் காலத்திலே திருமறையை மறுதலிக்க மறுத்ததற்காக பீற்றர் என்ற இளைஞனை சிறையிலடைத்தனர். பல மாதங்கள் சிறையில் வேதனைகள் அனுபவித்தான்.

ஒருநாள் அளவுகடந்த வேதனை தாங்கமாட்டாமல் தன கழுத்தில் அணிந்திருந்த பாடுபட்ட சுரூபத்தைப் பார்த்து, "ஆண்டவரே நான் இவ்வளவு காலம் இந்தச் சிறையில் அவதிப்படும்படி என்ன தீமை செய்தேன்? "எனக்கு ஏன் இந்தத் துன்பம்?" என்று ஆண்டவரிடம் முறையிட்டான். பீற்றரின் முறையீட்டைக் கேட்ட ஆண்டவர் இயேசு சொன்னார்.

"பீற்றர்! சிலுவையில் தொங்கிப் பாடும்படும்படி நான் என்ன குற்றம் செய்தேன் சொல்?" என்று கேட்டார்.

அதன்பிறகு பீற்றர் சிந்திக்கத் தொடங்கினார். ஆண்டவரின் பாடுகளைப்பற்றி சிந்தித்தார். பொறுமையின்றி இருந்ததற்காக ஆண்டவரிடம் மன்னிப்புகேட்டு மகிழ்ச்சியுடன் துன்பத்தை ஏற்றார். ஆண்டவர் அவரைப் புடமிட்டுப் பரிசோதித்த பின்னர் தனது அன்பை, இரக்கத்தை அவருக்கு நிறைவாகக் காண்பித்தார்.

# புதுமைகள் நிறைந்த பூண்டி மாதா

எல்லா மக்களுக்கும் அன்னையாக அருள் மழை பொழியும் தேவ தாயின் ஓர் திருத்தலம் தமிழ் நாட்டில பூண்டி எனும் அழகிய சிற்றூரில் அமைந்துள்ளது. தஞ்சை மாவட்டத்தில் கரிகாலன் கட்டிய கல்லணைக்கு கிழக்கே அமைந்துள்ளது இக்கிராமம் காவேரி யாற்றின் நீர் வளத்தினால் பசுமையும் எழிலும் கொஞ்சும் இக்கிராமத்தில் அன்னையின் ஆலயம் இருக்கின்றது. இத்தாலி நாட்டிலிருந்து இந்தியாவிற்கு திருமறையைப் பரப்ப என வந்த 'பெஸ்கி' எனும் இயேசு சபைக் குருவானவர் தமிழ் மொழியைத் திறம்படக் கற்றும் சிறந்த தமிழ்த்தொண்டு செய்ததால் ''வீரமா முனிவர்" என்றழைக்கப்பட்டார் (இவர் தான் தமிழில் தேம்பாவணி எனும் சிறந்த நூலை எழுதி கிறிஸ்துவின் வரலாற்றைத் தமிழ் உலகிற்குத் தெரிவித்தவர்) பூண்டியில 1720ம் ஆண்டு மரியன்னைக்கு ஓர் ஆலயம் அமைத்து, ''ஜெஹன்மராக்கினி மாதா" என அன்னைக்குப் பெயரிட்டார். இவ்வாலயம் ஒன்றரை நூற்றாண்டுகளின் பின்னர் பழுதடைந்து, மிகவும் அழகாகப் புதுப்பிக்கப்பட்டது. 1858ம் ஆண்டு பிரான்ஸ் நாட்டின் லூர்து பதியில், தேவதாய் பெர்னடெற் எனும் சிறுமிக்குக் காட்சி கொடுத்து ''நாமே அமலோற்பவம்" என அறிவித்துச் செபமாலையைச் செபிக்கும்படி எல்லா மக்களுக்கும் அறிவிக்கும்படி கூறினார். அவ்வருடம் பாரிஸ் நகரில் இருந்து வேதபோதக சபையைச் சேர்ந்த குருக்களால் மூன்று லூர்துமாதாவின் சுருவங்கள் இந்தியாவிற்கு கொண்டு வரப்பட்டு, அன்னையின் ஓர் சுருவம் பூண்டி ஆலயத்தில் தாபிக்கப்பட்டு இன்றும் பக்தர்களால் போற்றி வழிபடப்பட்டு வருகின்றது.

பூண்டி மாதா ஆலயத்தில் இறையருள் அளவிட முடியாததாக இருப்பது, இரவு நேரங்களில் ஆலயத்தினுள் தெரிந்த புதுமையான பிரகாசமான ஒளி மூலம் தெரியவந்தது. பங்குத் தந்தையும் மக்களும் ஆலயத்தினுள் சென்று பார்த்து விளக்கு, நெருப்பு எதுவுமின்றிப் பரவியவெளிச்சம் இறையருள் என வியப்படைந்தனர். மாதாவின் புதுமைகள் பக்தர்களுக்குப் பல விதங்களில் 1949ம் ஆண்டு கடுமையான வயிற்றுவலியால் பாதிக்கப்பட்டு சிகிச்சைகள் பலனளிக்காமல் வருந்திய ஞானதிக்கம் என்பவர் பூண்டி மாதாவிடம் வேண்டியதால், பூரண சுகம் அடைந்தார். தனது நன்றியைத் தெரிவிக்க தங்கத்தினால் செய்த 'கதிர் பாத்திரம்' ஒன்றை ஆலயத்திற்குக் காணிக்கை செலுத்தினார். 1951ம் ஆண்டு தீராத நோயால் பீடிக்கப்பட்ட ஒருவரும், வேலைதேடி அலைந்த ஒரு கிறிஸ்தவரும், இருவரும் சென்னையைச் சேர்ந்தவர்களாவர் பூண்டியில் உள்ள புதுமை மாதாவிடம் வேண்டுதல் செய்தால் கஷ்டங்கள் நீங்கும் எனக் கனவில் கண்டதால் அவர்கள் அன்னையின் திருத்தலத்திற்குச் சென்று மனம் வருந்தி அவவின் அருளை வேண்டினர். தமது கருத்துக்கள் நிறைவேறின. நன்றி செலுத்தினர். அன்னையின் புதுமைகள் எண்ணிலடங் காதவை. 1956ம் ஆண்டு ஆலயத்தின் நடுப்பகுதியில் பழுதடைந்த நிலையில் இருந்த மேற்சுவர் இடிந்து விழும் நிலையில் காணப்பட்டது. பங்குத்தந்தை லூர்து சேவியர் அடிகளார் செபித்துக் கொண்டிருந்த பொழுது அப்பகுதி இடையூறு ஏதுமின்றி அகற்றப்படும் என உணர்ந்தார். எனவே மக்கள் அவ்விடத்திற்குச் செல்லாமல் கயிறு கட்டிப் பாதுகாப்பு ஏற்படுத்தினார். [illegible]

வெள்ளிக்கிழமை மத்தியானம் 1மணிக்கு ஆலயத்தின் உள்பேரொலி கேட்டு எல்லோரும் ஓடிச்சென்று பார்த்த பொழுது பழுதடைந்த நடுப்பகுதி இடிந்து விழுந்திருந்தது மேல் விதானம் பீடம் ஒன்று சேதம் அடையவில்லை; அரச அதிகாரிகளும் மாதாவின் புதுமையை வியந்து பாராட்டினர். ஏராளமான நன்கொடைகள் கிடைத்ததால் அழகிய ஆலயம் சீரமைக்கப் பட்டு, 1964ம் ஆண்டு கும்பகோணம் மேதகு ஆயர் அவர்களால் அன்னைக்கு அர்ப்பணம் செய்யப்பட்டது.

அருள் திரு.லூர்து சேவியர் அடிகளார் அன்னையிடம் அளவற்ற பக்தி கொண்டவர். இரக்க குணம் மிகுந்தவர், உதவி வேண்டி வந்தோர்க்குத் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்வார். 'வியட் நாம் வீடு' சுந்தரம் எனும் சினிமா டைரக்டர், சினிமாத் துறையில் ஈடுபடுவதற்கு முன்பே லூர்து சேவியர் அடிகள்மேல் நல்ல மதிப்புடன் இருந்தார். பின்னர் அவர் தயாரித்து வெளியிட்ட ''ஞானஒளி" எனும் திரைப் படத்தில் அருள் தந்தையின் கதாபாத்திரத்தை, லூர்து சேவியர் அடிகளாரை முன் மாதிரியாக வைத்து எடுத்தார். தன்னலம் பாராது மக்களை சேவையை ஆண்டவன் தொண்டு என அயராது உழைத்த அடிகளார் 1972ம் ஆண்டு இறைவனடி சேர்ந்த பின், அவரது உடல் ஆலய முகப்பில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

ஆலயத்தின் முன்பகுதியில் ஓர் அழகிய பூங்காவும் அதன் நடுவில் தூய ஆரோக்கிய மாதா மணிமண்டபமும் அமைக்கப்பட்டது. தனிப்பங்காகப் பூண்டி அமைக்கப்பெற்ற 50வது பொன் விழாவின் சிறப்பம்சமாக ஆலயத்தில் திருப்பீடம் உள்மண்டபம் ஆகியன பளிங்குக்கற்களால் அமைக்கப்பட்டன. 1999ம் ஆண்டு கர்ப்பப்புற்று நோயின் தாக்கத்தால் சத்திரசிகிச்சைக்கு உட்படவேண்டியிருந்த பெண், பூண்டி மாதாவிடம் தனது நோயைத் தீர்க்கும்படி 3 சனிக்கிழமைகள் நவநாட் திருப்பலியில் மனமுருகி வேண்டினாள். 4வது சனிக்கிழமை அவவின் நோய் குணமாகி விட்டதென வைத்தியர்கள் அறிவித்தனர். மேலும் கேரளாவைச் சேர்ந்த 8 வயது சிறுமி தீராத சளித்தொல்லையால் அவதியுற்று புதுமை மாதாவின் கருணையால் குணம் அடைந்து, தரிசனங்களும் கிடைக்கப்பெற்றார். 2001ம் ஆண்டு கன்னியா குமாரி மாவட்டத்தைச் சேர்ந்த வில்பிரெட் என்பவரும் அவரது மனைவியும் நரம்பியல் நோயினால் பாதிக்கப்பட்டு, பூண்டி தேவாலயத்தில் ஒருவாரம் தங்கி செபித்துக் குணமடைந்தனர். பின்னர் வில்பிரெட் அவர்கள் ''தினத்தந்திப் பத்திரிகையில் பூண்டிமாதாவின் புதுமையை வெளியிட்டதாகக் கூறினார். 1999ம் திருத்தந்தை இரண்டாம் ஜோன் போல் அவர்கள் பூண்டித் திருத்தலத்தை 'திருத்தலப் பேராலயம் (Minor Basilica) எனும் நிலைக்கு உயர்த்தினார். புனிதவேளாங்கன்னி ஆலயத்திற்கு அடுத்ததாகப் பூண்டி மாதா ஆலயமும் தேவதாய் மக்களுக்கு அருளும் கருணையும் பொழியும் இடமாக இருக்கின்றது.

திருமதி புவனேஸ்வரிஅம்மா இரத்தினராஜா
(இலண்டன்)
ஓய்வுபெற்ற ஆசிரியர்
ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைச் சரம்

## வாடகை உலகம்

நிலையில்லா இவ்வுலகில்
நிலையான நிலம் தேடி
நிர்க்கதியாகி நிற்கும்
நிலையான நெஞ்சங்களே
நீங்கள் ஒன்றை
நினைவில் கொள்வீர்
நிரந்தரம் இது அல்ல என்று

பொருளுக்குள் பொருள்தேடி
பொன்னான காலத்தை
பொறுக்கிகள் புதைத்து
பொக்கிஷங்கள் என
எதை நீர் தேடுகிறீர்

வசிக்கும் நிலமா?
வாழும் வீடா?
தேடும் பொருளா?
சேர்க்கும் பணமா?
வைக்கும் சொத்தா?
அல்லது
பாதுகாக்கும் உயிரா?

இவை எல்லாம்
வீசும் புயலால்
கொதிக்கும் எரிமலையால்
வெடிக்கும் பூகம்பத்தால்
பொங்கும் சுனாமியால்
அழிக்கும் வெள்ளத்தால்
பாதுகாக்கப்படுமோ?
ஓ நெஞ்சங்களே!

வாடகைக்காரரான நீங்கள்
வசிக்கும் வீட்டிற்கும்
வட்டி செலுத்தாவிடில்
வந்திடும் சிக்கல்கள்

நிலையாக நீ வாழ
வழிதேடிச் சென்றிடுக
வாடகை உலகம்
வஞ்சித்துவிடும் உம்மை.

அ. ராஜி
பூசலன் வீதி
அச்செழு-நீர்வேலி.

## பிரிவின் வலி

"மாலைத்தாரகைகள் நட்சத்திரங்கள் போன்று
நாம் பிரிந்தோம் இருந்தும் பிணைப்பாகவும்,
சந்தோஷமாகவும், இணைந்திட்ட மீன் போன்று,
நாம் வாழ்ந்தோம். அதன் நடுக்கடலில்,
திடீரென வந்த விதி விரித்த வலைதான்
இந்தப் பிரிவின் தாக்கம், ஒரு பொழுதாய்.
நினைத் தாங்கிக்கொள்ளாது அதைமறக்கவும் முடியாது
அதைமறக்கவும் முடியாது அப்படி தாங்கினாலும் கூட
மனதில் உள்ள இடத்தில் வைத்து மழையில்
நனைந்த காகம் போன்று கவலையில்
நனைகின்றோம் தனிமையில் போலி போலி
வாழ்க்கை வாழ்கின்றோம்.
மனிதனைப் பிரிந்தால்
பிரிகின்றோம் நினைவு நின்ற
தொலைந்த கிராமத்தில் ஒரு தாய் தெரியும்
அப்படி வாழ்தல் கூட அதனைத்
தாங்கிக் கொள்ளும் சக்தியிருந்தால்
நாம் பலவற்றை வாழ்ந்தது
போன்றிருக்கும் இதைப்
போன்று தான் பசுஞ்சோலை
வைரங்களில் உறவுகளைப் பிரிந்து
தனிமையில் வாடும் நெஞ்சங்களை
ஒரு முறை பாருங்கள், அவர்கள்
வேரறுந்த மரம் போன்று - கவலையில்
தவிக்கின்றார்கள்"

மு. ஜெல்ஸன்
வவுனியா

## உறுதியான விசுவாசமும் காலத்துக்கேற்ப பணிகளுமே இன்றைய தேவை

— அருட் சகோ. றமேஸ் அ.ம.தி

விசுவாசம் என்பது ஒருவர் மேல் நாம் கொண்டிருக்கும் பற்று என்று கூறலாம். அதாவது வாழ்விலும் தாழ்விலும் அவரே தனக்கு ஏக துணை என்ற நினைவோடு, அவரிலே முழுமையான நம்பிக்கை கொண்டு, வாழும் வாழ்வே விசுவாச வாழ்வு ஆகும். செல்வத்திலே செழித்து, இன்பத்திலே திளைத்து, நிம்மதியோடு வாழ்ந்த ஆபிரகாம் இறைவனின் அழைப்பை உள்வாங்கி, தெரியாத இடத்தில், புரியாத மனிதர்கள் மத்தியில் வாழ புறப்படுகிறார் (தொ.நூ 12:1-4). இதுதான் உண்மையான விசுவாசம். தன்னை அழைத்த இறைவனுக்கு, அவரில் கொண்டிருக்கும் நம்பிக்கையை வெளிப்படுத்தும் பதில் மொழி என்றும் இதனை இனங்கண்டு கொள்ள முடியும். இறைவனில் விசுவாசம் கொண்ட மக்கள் எவ்வாறு தங்கள் வாழ்வில் இறைவனைப் பிரதிபலித்து வாழ்ந்தார்கள் என்று திருவிவிலியமும், திருச்சபை பாரம்பரியமும் எமக்கு சான்று தருகின்றன. இன்று புரியாத உலகில், அழிவுக் கலாச்சாரத் துக்குள், முகமூடி தரித்து வாழும் மக்கள் மத்தியில் வாழும் எமது விசுவாசம் எத்தகையதாக இருக்க வேண்டும்?

இன்று மனிதம் சிதைக்கப்படுகிறது பணத்திற்காகவும், சுயலாபத்திற்காகவும், மனிதனுடைய உரிமைகள் விலைபோகின்ற துர்ப்பாக்கிய நிலையே எமது சமுதாயத்தில் தலைதூக்கியுள்ளது. உண்மையைப் பேசுபவன் உலகறியாதவன் என்றும், ஏமாற்றி பிழைக்கத் தெரியாதவன் அனுபவமில்லாதவன் என்றும், நீதி நியாயம் பேசுபவர்களை புரட்சிக்காரர் என்றும் முத்திரை குத்தி மக்களை ஒரு மயக்க நிலைக்கு அழைத்துச் செல்லும் இக்காலத்தில் எமது விசுவாசம் குடத்தில் இட்ட விளக்காக அல்ல மாறாக சமூகத்தில் படர்ந்திருக்கும் பொய்களுக்கும், போலிகளுக்கும் எரியூட்டும் பிழம்பாக மாற வேண்டும். மக்களின் மயக்க நிலைகள் தெளிய, உண்மை நிலையை அவர்கள் உணர, சமூகம் ஒரு நல்ல மாற்றத்தை அடைய எமது இன்றைய பணிகள் அமைய வேண்டும். இதுவே இன்றைய தேவையுங்கூட. நற்செய்தியின் ஒளியில் சிந்திக்கும் ஒவ்வொருவருக்கும் இதிலே ஒரு தெளிவும், இப்பணியை செய்ய வேண்டும் என்ற உறுதியும் எழும் என்பதில் ஐயமில்லை.

காலத்தின் அறிகுறிகளை அறிந்து, நற்செய்தியின் ஒளியில் அதற்கு விளக்கம் கொடுப்பது திருச்சபையின் கடமை என்கிறது இரண்டாம் வத்திக்கான் சங்கம் (இ.உ.தி 4). எனவே கிறிஸ்துவின் பணியாளர்களாகிய எமது விசுவாசம் குறுகிய நோக்கங்களுக்கும், சோனல் மனப்பான்மைகளுக்கும் இடங்கொடாமல் உலகத்தை நோக்கி ஒரு பரந்த விசுவாசமாக அமையவேண்டும். விசுவாசத்தை பாதுகாக்க நாம் உலகத்தை விட்டு ஓட நினைப்பது; நாம் உண்மையான கிறிஸ்தவர்கள் அல்ல, நம் விசுவாசம் என்னும் உறுதி பெறவில்லை என்பதனையே காட்டுகிறது. எமது விசுவாசம் உறுதியானது என்றால் அது எமது பணிகளிலே குறிப்பாக நற்செய்தி அறிவிப்பு பணியிலே வெளிப்பட வேண்டும். இன்றைய பொருளாதார, சமூக அடிமைத் தளைகளிலிருந்து மக்களை விடுவிக்கும் பணியில் நாம் முன்வரவில்லையென்றால், காலத்தின் அறிகுறிகளை நாம் கண்டுணரவில்லையென்றால், மக்களின் இன்றைய தேவைகளில் நாம் கண்மூடிவிட்டோம் என்றுதான் பொருள். திருத்தந்தை 6ம் சின்னப்பர் கூறுவதைப்போல "கோடிக் கணக்கான மக்களின் விடுதலையை அறிவிப்பதும், அதற்கு துணை செய்வதும், சான்றுபகருவதும், திருச்சபையின் கடமை. இது நற்செய்திப்பணிக்கு புறம்பானதல்ல" மாறாக இதுவே இன்றைய தேவை.

இன்று எமது சமுதாயத்தில் பெரும்பகுதி மக்கள் தங்களிலே பல் வேறுபட்ட பிரச்சினைகளுக்கும், குழப்பங்களுக்கும், மனவேதனைகளுக்கும், இழப்புகளுக்கும் ஆளாகி வாழ்வில் நம்பிக்கையிழந்து, வாழ்வின் பொருள் மறந்து, வாழ்வே வேண்டாம் என்று நடைப்பிணங்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் நிலையில் அவர்கள் மட்டில் எமது கடப்பாடு என்ன? புனித யாக்கோபு தனது கடிதத்தில் குறிப்பிடுவதைப் போல ஒரு சகோதரன் அல்லது சகோதரி போதிய உடையும் அன்றாட உணவும் இல்லாதிருக்கும் போது அவர்கள் உடலுக்கு தேவையானவற்றை ஒன்றும் கொடாமல் உங்களுள் ஒருவர் அவரைப் பார்த்து, நலமே சென்று வாருங்கள்; குளிர் காய்ந்து கொள்ளுங்கள்; பசியாற்றிக்கொள்ளுங்கள் என்பாரென்றால் அதனால் பயன் என்ன? (யாக் 2: 15-16) இன்று கிறிஸ்துவின் பெயரால் திருமுழுக்குப் பெற்று, கிறிஸ்தவனாக அழைப்புப் பெற்ற ஒவ்வொருவருக்கும் அவர்கள் மட்டில் பல பொறுப்புக்கள் காத்திருக்கின்றன. ஒவ்வொரும் நற்செய்தி தரும் விசுவாச ஒளியில் முன்சென்று, இன்றைய காலத்தின் தேவையினை சமூக நோக்கில் விளங்கிக் கொண்டு, கிறிஸ்தவ விழுமியங்களை தங்கள் வாழ்வில் பிரதிபலித்து, தாம் கொண்டிருக்கும் விசுவாசத்திற்கு செயல் வடிவம் கொடுப்பதே இன்றைய தேவை அதுவே அர்த்தமுள்ள கிறிஸ்தவ வாழ்வும் ஆகும்.

### நீங்களும் அறிந்து தெளிந்து கொள்ளுங்கள்....

### - எதையும் தாங்கும் இதயம் -

**"இரவும் பகலும் இரண்டானால்
இன்பமும் துன்பமும் இரண்டானால்
உறவும் பிரிவும் இரண்டானால்
உள்ளம் ஒன்று போதாது"**

- என்று பாடுகின்றார் ஒரு கவிஞன்

உறவில் ஏற்படும் இன்பத்தை அனுபவிக்கும் உள்ளம் பிரிவில் ஏற்படும் துன்பத்தைத் தாங்க முடியாது தவிக்கின்றது. பிரிவு இப்படித் துயரத்தைத் தரும் என்று தெரிந்திருந்தால் நாங்கள் ஆரம்பத்தில் உறவு கொள்ளாமலே இருந்திருக்கலாம், என்று எண்ணந்தோன்றும் அளவிற்கு பிரிவின் வேதனை ஆழமானதாகக் காணப்படுகின்றது.

உறவில் இன்பம் காணும் ஒவ்வொருவனும் பிரிவையும் அனுபவித்துத் தான் ஆகவேண்டும். பிரிவின் துயரில் தான் உறவின் நெருக்கம் உணரப்படுகின்றது. நெருக்கமான உறவுகளைத் தொடர்ந்து வரும் பிரிவு மனிதனை உளரீதியாகவும் சிலவேளைகளில் உடலரீதியாகவும் பலவீனப்படுத்திவிடுகின்றது. இதன் விளைவுகள் பாரதூரமானவையாக அமைவது அன்றாட வாழ்வில் ஏற்படும் அனுபவங்களிலிருந்து புலனாகின்றது. பிரிவின் கொடுமையைத் தாங்கமுடியாததால் தற்கொலைகள், உடல்-உள நோய்கள், வாழ்க்கையில் பிடிப்பற்ற போக்குகள், வாழ்க்கையில் நொந்துகொள்ளும் தன்மைகள் போன்றன நாளுக்குநாள் அதிகரித்துக்கொள்ளும் தன்மைகள் போன்றன நாளுக்குநாள் அதிகரித்து வருவது பரிதாபகரமான இன்றைய சூழலை எடுத்துக் காட்டுகின்றது.

எனவே, வேதனையான நிகழ்வுகளிலிருந்தும் சாதனையை நிலைநாட்ட, துயரமான சம்பவங்களிலிருந்தும் மனமகிழ்ச்சியினைத் துளிர்விக்க, பிரிவுதரும் அனுபவங்களிலிருந்தும் மனித உறவினைப் பலப்படுத்த எதையும் தாங்கும் இதயத்தினை உதயமாக்குவோம் எதிர்கால உலகம் தனை உறவில் காணுவோம்..இறைவன் துணையுடன் வாழ்வோம்...

- படித்தவைகளில் அறிந்தவள் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணக வாழ்வின்

## 25 ஆம் வருட நினைவு

"இயேசுவின் பின்னால் நானும் செல்வேன்
திரும்பி பார்க்க மாட்டேன்"



உதயம் 06 - 11 - 1975

மறைவு 31 - 08 - 1985

### அருள் சத்தியன் அருமைநாயகம்

அன்பின் திருவுருவே
அருளின் பிறப்பிடமே
அறிவின் உறைவிடமே
இறைவன் அழைத்தனனோ?

எத்தனை ஆண்டுகள் சென்றிடினும்
எம்முடன் இணைந்து நீ வாழ்ந்து நின்ற
அத்தனை ஆண்டுப் பதிவுகளும்
அத்தனை விரைவாய் மறைந்திடுமோ

என்னை விட்டு நீ பிரிந்து
எங்கு சென்றாலும் உன் நினைவு
என்னை விட்டு அகல்வதில்லை
உன்னை இதயம் மறப்பதில்லை

இனிவரும் அத்தனை ஆண்டினிலும்
உன்னை நினைத்தே வாழ்ந்திடுவேன்
உனக்காய் என்றும் கரம் குவித்து
இறைவனிடம் நான் வேண்டிடுவேன்

குருவாய் வருவாய் என்றிருந்தேன்
திருவாய் மலர்ந்து மறைமொழி நீ
அருள்வாய் என நான் காத்திருக்க
விரைவாய் எனை நீ பிரிந்ததேனோ

சத்தியன் என்னும் பெயருடனே
சத்திய வழியில் நீ நடந்து
உத்தம வழியினை எமக்குணர்த்தி
சடுதியில் எம்மைப் பிரிந்ததென்ன

மகனே நீயும் மண்ணகத்தின்
இறைவன் பணியைச் செய்யாமல்
விண்ணவர் பதம் சென்றடைந்து
அவர் பணி செய்ய முனைந்தனையோ

உன் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, சகோதரிகள்
மைத்துனர்கள், மருமகள்

கரம்பொன் கிழக்கு,
ஊர்காவற்றுறை.

(Advt-48/10)


## குருக்களின் ஆண்டின் நிறைவில் இளவாலை



இளவாலை திருக்குடும்ப அருட் சகோதரிகள் இளவாலை மறைக்கோட்ட குருக்களை அழைத்து குருக்களின் ஆண்டின் நிறைவை சிறப்பிக்கும் நிகழ்வை யூன் மாதம் 17ம் திகதி திருக்குடும்ப கன்னியர் இல்லம், இளவாலையில் ஒழுங்கு செய்திருந்தனர். இதில் இளவாலை மறைக்கோட்டத்தை சேர்ந்த 12 குருக்கள் பங்கு கொண்டனர்.

குருக்கள் மங்களகரமாக வரவேற்கப்பட்டு, திருப்பலி ஒப்புக் கொடுத்ததும், இவர்கள் பங்கு கொண்ட காணிக்கைப் பவனியும், குருத்துவ ஆண்டின் நிறைவில் அர்த்தம் கொடுப்பதாக அமைந்திருந்தது. குருக்களின் ஆண்டின் நிறைவில் யாழ் மறைமாவட்ட ஆயர், குருக்கள் அனைவருக்காகவும் நன்றி கூறி செபிக்கும் நிகழ்வாக இந்நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.



"என் ஊழியனை கண்டுபிடித்தேன். என் திருத்தைலத்தால் அவனுக்குத் திருப்பொழிவு செய்தேன். என் கை எப்பொழுதும் அவனோடு இருக்கும்"

தி.பா 89:20-21

தகவல்: Sr.டிலோசியா.
(தி.கு)

## கார்மெல் அன்னையின் மகிமை



பாலும் தேனும் செழுமையும் கொழுமையும் கொண்ட வாக்களிக்கப்பட்ட புனித பூமியாம் இன்றுள்ள இஸ்ரேல் நாட்டின் ஒரு சிறு பகுதிதான் கார்மெல் மலை. 'கார்மெல்' என்றால் அழகுத் தோட்டம் என்று பொருள்படும். இக்கார்மெல் மலைக்கு விவிலிய வரலாற்றில் ஒரு சிறப்பிடம் உண்டு. இறைவாக்கினர்களில் மிகச் சிறந்தவராகக் கருதப்படும் எலியா இறைவாக்கினரின் உச்சக்கட்ட பணியின் தலமாக இது அமைந்தது எனலாம். இங்குள்ள "மூக்ரஹார்" என்ற இடத்தில் தான் எலியா இறைவாக்கினர் போலி இறைவாக்கினர்களுடன் ஓர் ஆன்மீக மல்யுத்தம் மேற்கொண்டு உயிருள்ள வாழும் இறைவனுக்கு சாட்சியம் பகர்ந்தார்.

கி.பி. 12ம் நூற்றாண்டில் வனத்துறைவியர் சிலர் இதே மலைக்கு வந்து தியானயோக சபையை நிறுவினார்கள். இச்சபையார் இறைவனின் அன்னையாம் புனித கன்னிமரியின் ஆதரவில், ஆழ்ந்த ஆன்மீக சிந்தனையிலும் தியானத்திலும் வாழ்க்கை நடத்தி வந்தார்கள். இம் மலையில்தான் அன்னை மரியாள் அங்கு வாழ்ந்த வனவாசிகளுக்கு காட்சி கொடுத்தார். இதனால் இவ் அன்னையை கார்மெல் மலை மாதாவென அவர்கள் அழைத்தனர். மண மக்களின் தலைவியென உன்னத சங்கீதத்தில் ஒப்பிடப்பட்டிருக்கும் இயற்கை அன்னையே இம் மலையில் உருவெடுத்து, எழில் நடைபுரிவது போன்ற தோற்றத்தையுடையது. இங்கு வாழ்ந்த இவ்வனவாசிகள் இப்பரிசுத்த கன்னிமரியாளையும் புனித எலியாவையும் கண்டு பாவித்து ஏகாந்தம், மௌனம், தபசு இவற்றுடன் கடவுளின் கற்பனைகளையும் தியானித்து வாழ்ந்தனர்.

கார்மெல் சபைக்கும் மிகப்பெரிய இருண்ட காலம் கி.பி. 13ம் நூற்றாண்டில் ஏற்பட்டது. புயலையும் பலத்த காற்றையும் தாங்கி நிற்கும் செடிகளும் மரங்களும் வலுவாய் எழும்பி நிற்பது போல், கார்மெல்சபையும் ஒரு சிறப்பு தனித்தன்மையுடன் வரலாற்றில் எழும்பி நிற்க இறைவன் செய்த திட்டம் இந்த சோதனைக் காலம் எனலாம். அப்போது ஐரோப்பா எங்கும் கொள்ளை நோய்கள், பஞ்சம் ஆகியவற்றால் பல உயிர்கள் பலியாயின! கார்மெல் துறவிகள் சிதறுண்ட ஆடுகளைப்போல் ஆயினர். சபை ஸ்தம்பித்துப் போனது போன்று தோன்றிய 1251ம் ஆண்டு யூலை 16ம் நாள், சபையின் நான்காவது தலைவராய் இருந்த சைமன்ஸ்ரொக் என்பவர் உடைந்த மரக்கலம் போல் ஆனார்.

அபயம் தேடி மரி அன்னையிடம் மன்றாடினார். அவர் செபம் வீண்போகவில்லை. தஞ்சம் தேடிய தன் மகனுக்கு, கார்மெல் அன்னை காட்சி கொடுத்தார். உத்தரியம் என்னும் ஒரு சிற்றாடையை அவரது கரத்தில் வழங்கி "மகனே" இதோ இந்த ஆடையைப் பெற்றுக் கொள். இது எனது அன்பின் பாதுகாப்பின் சின்னம். இதை அன்போடும் பக்தியோடும் அணிந்து கொள்பவர் இம்மையிலும் மறுமையிலும், எவ்வித துன்பத்திற்கும் நரக நெருப்பிற்கும் ஆளாகமாட்டார்கள்" என்று வாக்களித்தார். அந்நாள் முதல் உத்தரியம் கார்மெல் சபையினருடைய துறவு ஆடையின் ஒரு சிறப்பு அம்சம் ஆனது. கார்மெல் உத்தரியம் அன்னைமரி நம்மீது கொண்டுள்ள அன்பார்வம், அன்னைக்குரிய பரிவு, இவற்றின் அடையாளமாக மட்டுமல்ல, அவர் தனது மேலான பண்புகளான தூய்மை, விசுவாசம், நம்பிக்கை, அன்பு, தாழ்ச்சி, செபப்பற்றுதல் போன்றவற்றால் நம்மைப் போர்த்துவதின் அடையாளமாகவும், நாம் நம்மை அவருக்கு நேர்ந்தளித்து அவரைப் போல் நாம் வாழவும், இயேசுவைப் பின் செல்லவும் அவருக்கு ஊழியம் செய்ய கொண்டுள்ள நமது அர்ப்பணத்தின் அடையாளமாகவும் திகழ்கிறது. இவ்வாறு இத்தகைய அர்ப்பணத்தில் நிலைத்திருப்போரின் வாழ்வை நிச்சயமாக அன்னை மரியா இம்மையிலும் மறுமையிலும் காப்பார் என்பதற்கு ஓர் உறுதியான அடையாளம் இந்தக் கார்மெல் உத்தரியம் என்றால் மிகையாகாது அல்லவா! உத்தரியம் என்னும் அன்னை மரியின் உதவும் கரத்தைப் பற்றிக்கொள்வோமாக.

கார்மெல் அன்னையே, அரசியே, எம் தாயே, எம் தஞ்சமே, புகலிடமே வாழ்க! வாழ்க!

அருட்சகோதரி மேரிஹெரன்றியெல்

- அ. கா -


விண்ணக வாழ்வின் நீங்கா நினைவுகள்

31ம் நாள்



அன்னை மடியில் 30 - 10 - 1920

ஆண்டவன் அணைப்பில் 12 - 06 - 2010

அமரர்

சிமியோன் அன்னப்பிள்ளை

இறைவா! உம்மேல் நம்பிக்கை வைப்பவர்களுக்கு வாழ்வு மாறுபடுமேயன்றி அழிக்கப்படுவதில்லை.

அன்புக்கு இலக்கணமாய், எம் வாழ்வுக்கு ஒளி விளக்காய், வாழ்ந்த எம் அம்மாவே! நீள் பிரிவால் தவித்து நிற்கிறோம். உம் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் இங்கே ஏங்குகின்றோம், உம் பாசத்திற்காய், அன்புடன் அம்மா, ஆசையுடன் அம்மம்மா என்று யாரை அழைப்போம். துன்பமே அனுபவமாய் வாழ்ந்து வளர்த்த உங்களின் இழப்பிற்கு ஈடேதும் இல்லை. நீங்கள் இறைவனின் பேரின்ப வாழ்வில் என்றும் ஒளிவீசவும், நித்திய சாந்தியையும் பெற்றிட இறைவனை வேண்டி நிற்கிறோம்.

உங்கள் அன்பிற்காய் ஏங்கும்:
அன்பு மகள், மருமகன், பிள்ளைகள், மருமக்கள், அன்புப் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

...ம் கட்டை,
...மானிப்பாய்.

Advt-49/10



விண்ணக வாழ்வின் நீங்கா நினைவுகள்

பிறப்பு 05-08-1982

## 3ம் வருட நினைவில்....

மரியா, உன் பிரிவின் துயரைச் சொல்ல
எம்மிடம் வார்த்தைகள் இல்லை.
உன்னை நினைக்கும் போதெல்லாம்
வாழ்வில் ஒரு வெறுமையை உணர்கின்றோம்.
உன் அன்பை எண்ணும் போதெல்லாம்
உன்னைப் பார்க்கத் துடிக்கின்றோம்.
எம் இதயத்தில் வாழும் உன்னை
அன்பு செய்வதால் ஆறுதல் அடைகின்றோம்.
வான் வீட்டில் மீண்டும் உன்னைக் காணும் வரை
உனக்காகப் பாசத்துடன் செபிக்கின்றோம்.

மரியா

இறப்பு 08-07-2007

Advt-50/10 | கொழும்பு - 13 | உமது பிரிவால் துயருறும்: அம்மா, சகோதரிகள்.


## குருநகர் சந்தியோகுமையோரின் ஆலயத்தின் புராதன சரித்திரம்

யாழ்நகரின் மத்தியிலே கம்பீரமாய் தூபி மாடத்துடன் சித்திர விசித்திர அமைப்புடன் காட்சியளித்துக்கொண்டிருக்கும் மகத்துவம் பொருந்திய சந்தியோகுமையோர் ஆலயமானது யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு ஓர் அலங்கார தீபமாய்த் துலங்கி நிற்கின்றது. ஒலியத்தின் அமைந்துள்ள ஆலயமாகிய சந்தியோகுமையோர் சந்தியோகுமையோர் கோயிலுக்கு நாமே திட்டம் தீட்டிக் கண்காணித்த (அதி வண.பிதா எல்.சி.எச் மோறு ஆ.ம.தி. ஐ) அவர்கள் 1861ம் ஆண்டு ...... 25ம் திகதி (சந்தியோகுமையோர் திருநாளன்று) அத்திவாரக்கல்லை நாட்டினர்.

இவ் ஆலயம் வடக்கே பிரதான வீதியினாலும் கிழக்கே 6ம் குறுக்குத்தெருவாலும், தெற்கே பாங்ஷால் வீதியாலும், மேற்கே சென்ஜேம்ஸ் மேற்கு வீதியாலும் சூழப்பட்டுள்ளது. இவ்வாலயம் பிரதான வீதியை நோக்கியவண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. ஆலயத்தின் நீளம் 232அடி; அகலம் 82அடி; தூபி மாடத்தின் (டோம்) 81அடி; முகப்பின் உயரம்

(தொடர்ச்சி 8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...நூலகம்
திராவாந்துறைப் படிப்பகம்
...சபை, யாழ்ப்பாணம்



## சுரவணை, சின்னமடுமாதா யாத்திரைத்தல திருவிழா ஆவணி 05

மேற்படி யாத்திரைதல திருவிழாவிற்கான நவநாள் வழிபாடுகள் எதிர்வரும் 27ம் தேதி மாலை 4.00 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். நற்கருணை விழா வழிபாடு ஆகஸ்ட் மாதம் 4ம் தேதி மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகும். திருவிழா மறுநாள் 5ம் தேதி இடம்பெறும். அன்று காலை 6.30 மணிக்கு முதல்திருப்பலியும், திருநாட்திருப்பலி காலை 8.00 மணிக்கும் ஆரம்பமாகும். வழமையான திருத்தலத்திற்கான பஸ்பயண ஒழுங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.


தகவல் : அருட்திரு யே.அ.அருள்தாசன்
பரிபாலகர்

## குருநகர் சந்தியோகுமையோரின்...... (7ம் பக்கத் தொடர்ச்சி)

58அடி ஆலயத்தைச் சுற்றி தாழ்வாரமும் விறந்தையும் - அதனைச்சுற்றி 6படிகளும் இருக்கின்றன. ஆலயத்தின் உச்சியிலுள்ள தூபி மாடம் (வில்மச் சுமாடம்) றோமாபுரியிலுள்ள அர்ச். பேதுருவானவர் மகா தேவாலயத்தூபி மாடத்தைப்போன்ற தோற்றத்தை உடையதாயிருக்கின்றது. இத் தேவாலயத்தின் உள்ளும் புறமும் பல சிற்ப வேலைப்பாடுகள் பொதிந்து காட்சியளிக்கின்றன. தூபி மாடத்தின் உச்சியின் மனுக்குல மீட்பின் சின்னமான சிலுவை விண்ணை நோக்கிய வண்ணம் காட்சியளிக்கின்றது. தூபி மாடத்தின் உச்சியிலே நின்று பார்த்தால் யாழ் நகரத்தோற்றத்தின் இயற்கை எழிலே எளிதில் கண்டு நுகரக்கூடியதாக இருக்கின்றது. தூவி மாடத்தின் முன்னும் இருபக்கங்களிலும் முக்கோணங்களில் சுருபங்கள் அமைக்கப்பட்டிருக்கும் முறை அனைவரையும் கவரக்கூடியதாக இருக்கின்றது.

ஆலயத்தில் உள்ளே பெருந்தொகையான மக்கள் குழுமியிருந்து தேவாராதனைகளில் பங்குபற்றக்கூடிய வண்ணம் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. ஆலயத்தின் பலிப்பீடத்தின் மேலே திரு இருதயநாதரின் சருபம், சந்தியோகுமையோரினதும் அர்ச் அருளப்பரினதும் சுருபங்களும் சிலுவையில் அறையப்பட்ட ஆண்டவர் சருபமும் கண்கொள்ளாக்காட்சியாயிருக்கின்றன. பீடத்தின் முன்னே அழகாய் அமைக்கப்பட்ட சற்பிரசாதக் கிறதி இருக்கின்றது. இவ் ஆலயத்தின் 24தூண்கள் அரச மாளிகையின் தூண்களைப்போல் காட்சியளிக்கின்றன. ஆலயத்தின்14 ஸ்தலப்படங்கள் அழகாய் அமைக்கப்பட்டு ஆராதனைக் குரியவிதத்தில் காட்சி கொடுக்கின்றன. ஆலயத்தின் எப்பக்கம் திரும்பினாலும் சிறந்த சிற்ப வேலைப்பாடுகள் உள்ள சுவர்களையும் தூண் "லீஸ்தர்" போன்றவற்றையும் காணக்கூடியதாய் இருக்கின்ற இந்த உன்னத தேவாலயம் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாது இலங்கையிலேயே சிறந்த தேவாலயங்களுள் ஒன்று என்பதில் சற்றேனும் சந்தேகமில்லை. இந்தக்கோயில் வருகின்ற வருடத்துடன் தனது 150 வருடத்தில் காலடி வைக்க இருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

சந்சீயோருமைய்யோர் ஆலயத்தை ஆக்கியோரான பிதா



அதி.வண.பிதா லேயோண் சாள்ஸ் எக்ரர் மோறூ ஆ O.M.I

சந்தீயோகுமையோர் கோவில் மத்தியில் காணப்படும் கல்வெட்டு



கல்வெட்டு:- வண.பிதா யோசவ் றெபெய்றே அவர்களின் பூதவுடல் 1-11-1783ல் அடக்கம் பண்ணப்பட்டதற்கு அடையாளமான ஞாப கார்த்த கல்வெட்டு.

- பியோ -
புனித யாகப்பர் ஆலயம் குருநகர்.

## புனித மடுத்தீனார்..... (1ம் பக்கத் தொடர்ச்சி)

தந்தையர்கள் அருட்திரு ஸ்டலின், குருமட ஆன்மீகத்தந்தை, றெஜீஸ் இராஜநாயகம் குருமட மாணவர்கள் மட்டில் பெற்றோர்களுக்குள்ள பொறுப்புக்கள் பற்றிய கருத்தரங்கை நடத்தினார்கள். பின்னர் ஆசிரியர்களாக திருமதி ஜோன் அரியதாஸ் திரு. ஸ்ரனிஸ்லஸ் குருமடமாணவர்களின் பெற்றோர்களைச் சந்தித்து உரையாடினார்கள். அருட் தந்தையர்கள், ஆசிரியர்கள், குருமடமாணவர்கள், எல்லோருமாக மதிய உணருந்திய பின் பெற்றோரகள் குருமட சமூகத்திடமிருந்து விடைபெற்றார்கள்.

## வரலாற்று பாடநூலில்.... (1ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்தும் வகையிலும் திருத்தந்தையரின் மதிப்பிற்கு ஊறுவிளைவிக்கும் வகையிலும் காணப்படும் கருத்துக்கள் பற்றி கல்வி அமைச்சர் பந்துள குணவர்த்தனாவை கொழும்பு ஆயர் இல்லத்தில் பேராயர் அவர்கள் 24-06-2010 அன்று சந்தித்து மேற்படி கருத்துக்கள் பற்றி எடுத்துக் கூறினார்.

தொடர்ந்து அவர் கூறுகையில் மேற்கூறப்பட்ட கருத்துக்களானது மதங்களிடையே வேறுபாட்டையும் கசப்புணர்வையும் ஏற்படுத்தக்கூடிய கருத்துக்களாக அமைகின்றன. கத்தோலிக்க திருச்சபையானது நாட்டின் ஜனாதிபதியுடன் இணைந்து செயலாற்றி வருகின்றது. பாடப்புத்தகங்களில் காணப்படும் கருத்துக்கள் நாட்டின் வேறுபாடுகளை உண்டாக்குவதை நாங்கள் விரும்பவில்ல என்றும் இந்த விடயங்களை கவனத்திற் கொண்டு இதற்குரிய நடவடிக்கையை எடுக்குமாறு கேட்டுக் கொண்டார். அதே நேரத்தில் இப்படியான சமய சம்மந்தப்பட்ட பாடநூல்களை பதிப்பிடுவதற்கு முன் சர்வமத தலைவர்களுடன் ஆலோசனை பெற்று மதிப்பிடுவது சிறந்தது என்றும் எடுத்துக் கூறினார்.

நன்றி - Messenger

## திருவுள பணியாளர்.. (1ம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்வாகக் கொண்டு இறைசிதத்திற்கு தம்மை ஒப்புக்கொடுத்து பணியாற்றி வரும் இறைவனின் திருச்சபையின் புதிய முதல்வர் அருட்பணி. டண்ஸ்ரன் அவர்கள் யாழ் மண்ணில் சின்ன உரோமை என அழைக்கப்படும் இயற்கை எழில் ததும்பும் சில்லாலை எனும் ஊரை பிறப்பிடமாக கொண்டவர். இவர் கதிரைமாதா ஆலய பங்கில் விசுவாசம் நிறைந்த ஓர் குடும்பத்தில் கடைசிப்புதல் வனாக 1970 ஆடித் திங்கள் 15ம் நாள் பிறந்தார். இவருடைய தந்தை காலம் சென்ற இராஜதுரைறேமன் செல்வரட்ணம். இவர் இலங்கை போக்குவரத்து சபையின் யாழ் பிராந்தியத்தில் பொறியியல் பகுதியில் உயர் அதிகாரியாக பணிபுரிந்தவர். இவருடைய தாயார் புஷ்பம், ஒரு சமூகசேவையாளர். அருட்தந்தை அவர்களுக்கு ஒரு சகோதரனம், சகோ தரியும் உள்ளனர். 12 வயதில் தந்தையை இழந்த நிலையில் தாயின் அயரா முயற்சியினாலும் தியாகத் தினாலும் அன்பு பராமரிப்பினாலும் பிள்ளைகள் மூவரும் வாழ்க்கை பயணத்தில் முன்னேறினர். இந்நிலையில் தாயின் ஆழமான விசுவாச செபதப முயற்சிகள் அருட் பணி.டண்ஸ்ரன் அவர்களை இறைவனின் திட்டத்திற்கு மாற்றியமைத்தது.

1986ல் தன்னை குரு மடத்தில் இணைத்துக் கொண்ட இவர் 1997ல் தனது குருத்துவ இலக்கை அடைந்தார். இவர் சில்லாலை மண் ணின் 30வது குருமணி என்பது குறிப்பிடத்தக்கது. குடும்பத்தில் பல கஷ்டங்கள் இழப்புகள் இருந்த போதும் அனைத்தையும் சவாலாக ஏற்று தாயின் வ்ழிகாட்டலும், நம்பிக்கையும் இன்று அவரை உன்னத நிலைக்கு உயர்த் தியுள்ளது. இவருடைய பயிற்சிக் காலமானது ஆரம்பமும் முடிவும் நீங்கலாக ஏனைய காலம் முழுவதும் திருவுளச் சபையின் இல்லத்தில் தங்கியிருந்து உருவாக்கம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

எவருக்கும் எதற்கும் இல்லை எனது 'ஆம்' என்று முன்வந்த வேை செய்வதில் எப்போதும் முன்னிற்பவர். ஆகவே திருவுளச்சபையின் விருதுவாக்கான 'அமலமரி வழி இறை சித்தம்' ஆகும் தொடர்ந்தும் இதே மன நிலையில் முதவ்லர் அருட்பணி. டண்ஸ்ரன் அவர்களின் புதிய பணி சிறக்கவும் அதன்மூலம் திருவுளச் சபை மென்மேலும் தமது பயணத்தில் ஆழமாக தடம் பதித்து 'எங்கெல்லாம் கிறிஸ்துவுக்கு உரிமையுண்டோ அங்கெல்லாம் தந்தையின் திருவுளத்தை நிறை வேற்றும் கிறஸ்துவின் கருவியாய், மங்கள வார்த்தையின் போது மரியன்னை இருந்த மன நிலையில் எப்போதும் வாழ வரம் வேண்டி உளமார வாழ்த்தி வரவேற்கின்றோம்.

### தேசிய மறையாசிரியர் விண்ணப்பம்

2010 தேசிய மறை ஆசிரியர் தேர்வு எழுத விரும்புவோர் பங்குத் தந்தையூடாக யாழ் மறைக்கல்வி நடுநிலையத்தில் விண்ணப்பப் படிவத்தை பெற்றுக் கொள்ளலாம்.

- தகவல் : இயக்குனர்
மறைக்கல்வீ நடுநிலையம்.

## கிறிஸ்துவுக்காக.. (4ம் பக்கத்தொடர்ச்சி)



நிலாவெளி பகுதி சிறுமிகளை மகிழ்வித்து அவர்களின் சோகங்களை அறிந்து கொள்ளும் இளம் பெண்கள் பிரசீடிய சகோதரிகள்.



செபவழிபாட்டின் பின்; தலைவர் நன்றி கூறும் நிகழ்வு.

- தலைவர் -
யு.ஆ. சேவியர்
கொழும்பு மறைமாவட்ட தமிழ் மரியன் சேனை பரிகார மாதா கொமித்சியம்.

## உறவின_ (1ம் பக்கத்தொடர்ச்சி)

இறைமக்களும் பயிற்சி பெறும் நோக்கத்திற்காக மட்டுமே இவ். இறுவட்டுக்களை வெளியிட்டுள்ளோம். எனவே இவற்றை வேறு நோக்கத திற்காகப் பயன்படுத்துவதும் பிரதி செய்வதும் விற்பனை செய்வதும் தடை செய்யப்பட்டுள்ளது.

எனவே வழிபாடுகளுக்கு வருகின்ற இறைமக்கள் அனைவரும் வழிபாடுகளில் முழுமையாகவும் அர்த்தமுள்ள விதத்திலும் பங்கு கொள்ள உதவும் பொருட்டு, உங்கள் நாளாந்த வழிபாடுகளிலும் திருநாள் வழிபாடுகளிலும் இப்பாடற் புத்தகத்தில் அடங்கியுள்ள பாடல்களையே பயன்படுத்துமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றோம். அத்தோடு, பதிலுரைப் பாடல்களுக்காகத் தியானப் பாடல்களைப் பாடும்போது அவை எப்போதும் திருப்பாடல் களாகவே இருக்க வேண்டும். பதிலுரைப் பாடல்களுக்குப் பதிலாக திருப் பாடல்கள் அல்லாத வேறு பாடல்களைப் பாடுவது தவிர்க்கப்பட்டுள்ளது. இவ்விடயத்தில் பங்குகளிலும் மறைமாவட்ட நிறுவனங்களிலும் வழிபாட்டுக்குப் பொறுப்பாயிருக்கின்ற அருட்தந்தையர்களும் ஏனையவர்களும் கூடிய கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இவ்வொழுங்கு விதிகள் மீறப்படும் போது அவை ஏனைய பங்குகளுக்கும் நிறுவனங்களுக்கும் பெரிய இடறலாக அமைகின்றன என்பதை உணர்ந்து கொள்வோம்.

அருட்தந்தை ம. றெக்ஸ் சவுந்தரா
இயக்குநர்
யாழ். திருவழிபாட்டு நடுவகம்

### எதிர்பாருங்கள்.

குருக்கள் ஆண்டையொட்டி பாதுகாவலனால் நடத்தப்பட்ட கட்டுரை, கவிதைப் போட்டிகளில் பரிசு பெறுபவர்களின் பெயர் விபரங்களை வெகுவிரைவில் அறியத்தருவோம் என மகிழ்ச்சியோடு தெரிவிக்கின்றோம்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் [illegible] அவர்களது அச்சகத்தில் 2010 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org